விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆனி-03 | 17-06-2004 | வியாழக்கிழமை | ஓசை -120




# சமாதானத்திற்கும், தமி.தேசியத்திற்கும் எதிரான பிரசாரத்திற்கு அரச வானொலி உதவுகின்றது

## உடன் நிறுத்தப்பட வேண்டுமென புலிகள் நோர்வேத் தூதுவரிடம் வலியுறுத்து


(கிளிநொச்சி)

**சமாதானத்திற்கு எதிராகவும், தமிழ்த் தேசியத்திற்கு எதிராகவும் பிரதேசவாதத்தைத் தூண்டும் வகையில் மேற்கொள்ளப்படும் பிரசாரத்திற்கு அரச வானொலி வாய்ப்பளிக்கின்றது. இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என நேற்று கிளிநொச்சியில் நோர்வேத் தூதுவருடன் நடைபெற்ற சந்திப்பின்போது அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.**

நேற்றுக் காலை 10.30 மணிக்கு கிளிநொச்சியில் உள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பு நண்பகல் 12.10 வரை நீடித்தது.

இச்சந்திப்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன், விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தைச் சேர்ந்த செல்வி, ஜோச் ஆகியோர் கலந்து கொண்டனர். நோர்வேத் தரப்பில் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் கான்ஸ் பிறஸ்கார், இரண்டாவது தூதரக அதிகாரி கெஸ்ரி துரும்சன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக நேற்றுக் காலை 10.00 மணிக்கு உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தை வந்தடைந்த இவர்களை விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், சமாதானச் செயலகத்தைச் சேர்ந்த பவானந்தன் ஆகியோ (12ஆம் பக்கம் பார்க்க)



— காலை வீதி நெருக்கடியைத் தவிர்க்க —

## அலுவலக, பாடசாலை நேரங்களில் மாற்றம் கொண்டுவர அரசு யோசனை

போக்குவரத்து வீதிகளில் நெருக்கடி அதிகரித்திருப்பதால் அலுவலக நேரங்களிலும் பாடசாலை நேரங்களிலும் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. காலை 8.45 தொடக்கம் மாலை 4.45 வரை என்ற கடமை நேரத்திற்கு அமைவாக அலுவலக ஊழியர்கள் காலதாமதமாக சேவைக்கு வந்தால் குறிப்பிட்ட நேரம்வரைக்கும் தமது கடமைகளைச் செய்து வெளியேற முடியும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது. அதேபோல் காலை 8.00 மணி தொடக்கம் பி.ப., 2.00 மணி வரை இயங்கும் பாடசாலை நேரங்கள் (12ஆம் பக்கம் பார்க்க)

## ஆண்டு 1இல் மாணவரை அனுமதிக்க சனாதிபதி பொதுத்திட்டம் அறிவிப்பு

அரச பாடசாலையில் தரம் ஒன்றில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான பொதுத் திட்டத்தை அரசாங்கம் அறிவித்துள்ளது. சிறிலங்கா சனாதிபதி விடுத்த அறிவித்தலில் இவ்விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் போது இரண்டு முக்கிய விடயங்கள் கருத்தில் கொள்ளப்படும். விண்ணப்பிக்கப்படும் பாடசாலைக்கும் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரியின் வீட்டிற்கும் இடையிலான தூரம், அனுமதிக்கப்படும் மாணவரின் பெற்றோருக்கும் பாடசாலைக்கும் இடையிலான தொடர்பு என்ப (12ஆம் பக்கம் பார்க்க)

## சுயாதீனத் தேர்தற் குழு அமைக்கப்படுவது அவசியம்

-ஐ.நா.தேர்தல் கண்காணிப்பாளர்

இலங்கையின் எதிர்காலத் தேர்தல்களில் தமது அமைப்பு கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்வதில் பிரச் சினைகளை எதிர்நோக்கு வதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.என ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைத் தேர்தல் கண்காணிப்பாளர் ஜோன் குஸ்னகன் தெரிவித்துள்ளார். நேற்று அவர் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப்ஹக்கீமைச் சந்தித்தார். இதன் போது இலங்கையில் சுயாதீன தேர்தல் ஆணைக்குழு அமைக்கப்பட வேண்டி (12ஆம் பக்கம் பார்க்க)

## போர் நிறுத்தம் பேணுவது குறித்து நேற்றைய சந்திப்பில் ஆராய்வு

### நோர்வேத் தூதுவர் கான்ஸ்பிறஸ்க்கர்

(கிளிநொச்சி)

விடுதலைப்புலிகளுடனான நேற்றைய கலந்துரையாடலின் போது பலவிடயங்கள் ஆரயப்பட்டன அதில் முக்கியமாகப் போர் நிறுத்தத்தைத் தொடர்ந்து பேணிக் கொள்வது குறித்து ஆராய்ந்தோம். என நோர்வேத் தூதுவர் கான்ஸ் பிறஸ்க்கர் நேற்று கிளிநொச்சியில் தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினருடன் சந்திப்பை முடித்த பின் பத்திரிகையாளருக்கு அவர் இதனைத் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சிற்கான அவசியத் தன்மை, பிரதேச அபிவிருத்தி, மக்களின் மனிதாபிமானத் தேவைகள், சமாதான முன்னெடுப்புக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளில் தெரிவிக்கப்பட்ட ஆட்சேபனைகள் பற்றியும் கலந்துரையாடினோம் எனத் தெரிவித்த நோர்வேத் தூர்துவர் இன்று கொழும்பு சென்றதும் அரசாங்கப் பிரதிநிதிகளுடனான சந்திப்பொன்றில் (12ஆம் பக்கம் பார்க்க)



## மக்களைக் குழப்பும் வகையிலான பிரசாரம் சிறிலங்கா அரச வானொலி செய்கின்றது

— மட்டு. அம்பாறை அரசியல்துறையினர் குற்றச்சாட்டு

மக்களைக் குழப்பும் வகையில் சிறிலங்கா அரசாங்க ஊடகங்களிலும், தனியார் ஊடகங்களிலும், மேற்கொள்ளப்படும் பொய்ப்பிரசாரங்களை மட்டு. அம்பாறை அரசியல்துறையினர் கண்டித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

சிறிலங்கா அரச ஊடகங்களிலும், தனியார் ஊடகங்களிலும் அண்மைக்காலமாக மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் மக்கள் மத்தியில் பதட்டத்தையும், பீதியையும் ஏற்படுத்தக்கூடிய வகையில் திட்டமிட்ட ரீதியில் பல்வேறு செய்திகள் பரப்பப்பட்டு வருகின்றன.

இவ்வகையில் கடந்த சில நாட்களாகத் தொப்பிக்கலைக் காட்டுப்பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் கருணா குழுவினருக்குமிடையே பெரும் மோதல்கள் நடந்துவருவதாகவும் 70ற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளதாகவும் முற்றிலும் உண்மைக்குப் புறம்பான செய்திகள் (12ஆம் பக்கம் பார்க்க)

## இன்று யாழ்.நல்லூரில் ஆரம்பமாகும் பேரணிக்கான ஏற்பாடுகள் பூர்த்தி

ஐந்து அம்சக்கோரிக்கைகளை வலியுறுத்தி இன்று யாழ்.நகரில் நடைபெறவுள்ள பேரணிக்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.இன்று காலை 10.00 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு முன்பாகப் ஆரம்பமாக உள்ள இப்பேரணியில் யாழ். குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிருந்தும் மக்கள் ஒன்று திரளவுள்ளனர். பேரணி அங்கிருந்து யாழ்.அரதிபர் செயலகம் நோக்கிக் கோவில் வீதியூடாகச் செல்லவுள்ளது.

அன்றாட வாழ்க்கையைப் பாதிக்காத வகையில் இப் பேரணி நடைபெறும் என அறிவிக்கப் பட்டிருக்கிறது.

இவ்வாறு நடைபெறவுள்ள பேரணியின் முக்கியத்துவம் கருதி இப் பேரணியில் கலந்து கொள்ளுமாறு பல்வேறு பொது அமைப் (12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பேரணி செல்லவுள்ள பாதையில் படையினர் நிறுத்தப்பட்டனர்

இன்று இடம்பெறவுள்ள கண்டனப்பேரணிக்கான முழு ஏற்பாடுகளும் செய்து முடிக்கப்பட்டுள்ள நிலையில் யாழ். நகரப்பகுதியில் பெருமளவு படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

யாழ். நகரப்பகுதியில் குறிப்பாகப் பேரணி பயணிக்கவுள்ள பிரதான வீதிகள் மற்றும் சந்திப் பகுதிகளில் நேற்று முன்தினம் மாலை முதல் படையினர். நிலைகொள்ளவைக்கப்பட்டுள்ளனர். 2ஆம் நாளாக நேற்றிரவு வேளையும் படையினர் அப்பகுதிகளில் நிலைகொள்ள வைக்கப்பட்டிருந்தனர். (27)

## வரிவிளம்பரம்

### O/L விண்ணப்பப்படிவம்

க.பொ.த.சா.தரப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவம் சகல அறிவமுது பொத்தகசாலைகளிலும் கிடைக்கும். (4704)

### ஆசிரியர் போட்டிப் பரீட்சை வகுப்பு

யூலையில் நடைபெறவுள்ள பரீட்சைக்கான வகுப்புக்கள் 18.06.2004 வெள்ளி 2.00 மணிக்கு கிளி. புதிய உயர் கல்வி நிலையத்திலும் (பழைய புகையிரத நிலையவீதி), மாலை 4.15இற்கு 275 சில்வாவீதி, வட்டக் கச்சியிலும் நடைபெறுகின்றது. (4708)

### தவறிவிட்டது

தவராஜா ஜானகி ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (இல. 846672753V) கைப்பையுடன் கடந்த 29-05-2004 அன்று தருமபுரத்திற்கும் விசுவமடுவிற்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் மாவீரர் படிப்பகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். தகவல்: ஜானகி. (4709)

### தவறிவிட்டது

கமலேஸ் பிரதீபன் ஆகிய எனது 113, கிறீன் வீதி, திருகோணமலை எனும் முகவரியிடப்பட்ட தேசிய அடையாள அட்டை (இல.810843160V) யும், பாடசாலை அடையாள அட்டையும் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனை, புதுக்குடியிருப்பு அல்லது அன்ரன் பரமதாஸ், 8ஆம் வட்டாரம் மந்துவிலில் தயவு செய்து ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். தகவல்: பிரதீபன். (4652)

### தவறிவிட்டது

கனகசபை விநாயகமூர்த்தி (கரியாலை நாகபடுவான் பல்லவிராயன்கட்டு) ஆகிய எனது சாரதி அனுமதிப் பத்திரம், மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம் என்பன அடங்கிய கைப்பை 14-06-2004 அன்று புதூர் நாகதம்பிரான் ஆலயத்தில் இருந்து மாங்குளம் ஊடாக மல்லாவிக்கும் இடையில் தவறவிடப்பட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் மல்லாவி ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (4126)


# அபிவிருத்தி என்ற பெயரில் அரசின் கபட நாடகத்தை ஏற்க முடியுமா?

## வலி. வடக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியம்

தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால சுயாட்சி அதிகாரசபை முன்மொழிவுகளை ஓரங்கட்டி விட்டு, தனது அதிகாரிகளை இங்கு அனுப்பி, புனர்வாழ்வு, அபிவிருத்தி என கபட நாடகம் ஆட முன்வருவதை நாம் ஏற்றுக் கொள்ள முடியுமா? என வலி.வடக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியம் இணையப் பேரணி குறித்து வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்த முன்மொழிவுகள், பாதிக்கப்பட்ட இன்னலுற்ற தமிழ் மக்களின் அபிலாஷைகள், உடனடித் தேவைகளே.

இவற்றை நிறைவேற்றுவதன் மூலம் தான், சமாதான நடை முறையின், முன்னெடுப்பின் அடுத்த கட்ட நகர்வுக்கான பாதை திறக்கும் என்பது யாவரும் புரிந்துகொள்ளக் கூடியதே. ஆனால், சந்திரிகா சிங்கள பேரினவாதத்தின் மகுடமிட்ட தலைவியாயிற்றே! இவருக்குத் துணையாகப் பேரினவாத சேற்றில் புரண்டெழும் ஜே.வி.பி.யினர், சிங்களப் பேரினவாதத்தின் தளத்திலேயே சிங்கள அரசியலின் உயிர் நிலை கொண்டுள்ளது.

எனவேதான், சிங்களப் பேரினவாதம் என்ன தான் அரிதாரப்பூச்சினைப் பூசிக்கொண்டாலும் நாம் ஏமாறப்போவதில்லை.

சிங்களப் பேரினவாதம், மலையகத்தில் வெறியாட்டம் ஆடத் தொடங்கிவிட்டது. எங்கெல்லாம் ஒடுக்குமுறை அதிகரிக்கின்றதோ அங்கெல்லாம், இறுதிக்கட்டத் தீர்வுக்கான வழிமுறை வன்முறை என்பது சமூக இயங்கியல் நியதி. அங்கு பாராளுமன்ற அரசியல், போராட்ட அரசியலாக உருமாறும், இரத்தம் சிந்தும் அரசியலாக உயர்வுபெறும்.

நாம் மலையகத் தமிழருக்காகவும் குரல் கொடுக்கிறோம், குமுறுகிறோம்.

கருத்துச் சுதந்திரத்தின் குரல்வளையை நசுக்கியவர்கள் யாரென்பதை, உண்மையை உரைத்த உத்தமர்களை பதைக்கக் கொன்றவர்களை நாமறிவோம்! சரித்திரத்தின் குப்பைத் தொட்டி உங்களுக்காகக் காத்திருக்கிறது.

இது கண்டனப் பேரணி மட்டுமல்ல மக்கள் எழுச்சி, மக்கள் கிளர்ச்சியாக, புரட்சியாக வெடிப்பதற்கு இது கட்டியம். இடம் பெயர்ந்தோர் முகாம்களில் தவிப்பவர்கள்,தொழிலை இழந்தவர்கள், இராணுவமயப்பட்ட சிங்கள பேரினவாத அரசியலை வெட்டி எறியத் துடித்து எழ அழைக்கும் முரசறைவு, இதுவாகும்.

தமிழ்த் தேசியம் என்றும் குமுறும் எரிமலையாக, அணிதிரள வேண்டிய வரலாற்றுக்கடமை எமக்குண்டு, எல்லோருக்கும் உண்டு என மேலும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தள்ளாடி முகாமில் பாரிய வெடிச்சத்தங்கள்

(மன்னார்)

மன்னார் தள்ளாடி இராணுவ முகாமில் நேற்று முன்தினம் இரவு பாரிய வெடிச்சத்தங்கள் கேட்டன. இரவு 11.30 மணியளவில் கேட்ட இவ்வெடிச்சத்தங்களால் மக்கள் பீதியடைந்தனர். (மி)

## விளையாட்டு விழா

(உடையார்கட்டு)

உடையார்கட்டு-சுதந்திரபுரம் கொலனி, துரோணர் முன்பள்ளியின் விளையாட்டு விழா இன்று 2.00 மணிக்கு துரோணர் முன்பள்ளி மைதானத்தில் நடைபெறும். இவ்வருடாந்த முன்பள்ளி விளையாட்டு விழா சமூக பொருளாதார வளர்ச்சி நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறவுள்ளது.

## பயிலரங்குகள்

(முல்லைத்தீவு)

முல்லை. மாவட்ட சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கான பயிலரங்குகள் நடைபெறவுள்ளன.

ஒட்டுசுட்டான் வித்தியாபுரத்தில் 19ஆம் திகதியும், பாலிநகரில் 20ஆம் திகதியும் இப்பயிலரங்குகள் நடைபெறவுள்ளன.

திருகோணமலையிலிருந்து வருகை தரவுள்ள வள அறிஞர்களே இந்தப் பயிற்சியினை வழங்கவுள்ளனர் என முல்லை. மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சி. மோ. சிவமயம் தெரிவித்தார். (20)

## மன்னார் மாவட்டத்தில் புலமைப் பரிசில் பரீட்சைக்கு 1504 மாணவர் தோற்றுகின்றனர்

(மன்னார்)

எதிர்வரும் ஆவணி மாதம் நடைபெறவிருக்கும் 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்கு இத்தடவை மன்னார் மாவட்டத்தில் 1504 மாணவர்கள் தோற்றவுள்ளனர். மன்னார் கல்வி வலயத்தில் 1223 மாணவர்களும், மடு கல்வி வலயத்தில் 281 மாணவர்களும் தோற்றவுள்ளனர். மொத்தமாக 20 பரீட்சை நிலையங்களில் இப்பரீட்சை நடைபெறவுள்ளது. (மி)

## வவுனியா–கொழும்பு புகையிரதத்தில் சோதனையிடப்போவதாகக் கூறி தமிழரிடம் பணம், நகை கொள்ளை

(கொழும்பு)

வவுனியா - கொழும்பு புகையிரதத்தில் பயணம் செய்த இரு தமிழர்களைச் சோதனையிட வேண்டுமெனக் கூறித் தனியான இடத்துக்கு அழைத்துச் சென்று அவர்களிடமிருந்து பணமும் நகையும் கொள்ளையிடப்பட்டுள்ளன.

பொலிசார் எனத் தம்மை அறிமுகப்படுத்திய இவர்கள் அவ்விருவரையும் சோதனையிடப்போவதாகக் கூறி புகையிரத்திலிருந்து இறக்கிச்சென்று கீனவலை சுடலைக்கு அண்மையில் வைத்து இக்கொள்ளை நடத்தியுள்ளனர்.

## முல்லை. மாவட்ட வெதுப்பகங்களின் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல்

(முல்லை)

முல்லை. மாவட்டத்திற்குட்பட்ட சகல வெதுப்பக உரிமையாளர்களுக்குமான அவசரகலந்துரையாடல் ஒன்று இன்று வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள முல்லை.மாவட்ட அரசியல் துறை ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெற இருப்பதால் முல்லை. மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து வெதுப்பக உரிமையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு முல்லை. மாவட்ட அரசியல் துறையினர் கேட்டுள்ளனர்.

## உதைபந்தாட்டப் பயிற்சியும் ஆங்கில விருத்திப் பயிற்சியும்

(கிளிநொச்சி)

இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள 06 வயது தொடக்கம் 11 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான உதைபந்தாட்டப் பயிற்சியுடன், ஆங்கில மொழி விருத்திப் பயிற்சியும் ஆரம்பிக்கப்படவுள்ளதால் பதிவு செய்தவர்களையும், பங்குபற்ற விரும்பும் புதியவர்களையும் எதிர்வரும் 21ஆம் திகதி திங்கள் மாலை 5.00 மணிக்கு கிளிநொச்சி இளையோர் செயற்பாட்டு நிறுவன அலுவலகத்திற்கு சமுக மளிக்கும்படி இளையோர் செயற்பாட்டு நிறுவனம் கேட்டுள்ளது. (சோ)


## இயல விற்பனை

உந்துருளிகள் இயங்கும் நிலை / உதிரிகளாக்கும் நிலை ஈருருளிகள் இயங்கும் நிலை பார்வையிடும் காலம் 17-06-2004, 18-06-2004, 19-06-2004.

☐ இயலம் நடைபெறும் நாள்: 20-06-2004 காலை 10.00மணி

☐ இடம் : உடைமைப் பகுதிச் செயலகம் வேணாவில், புதுக்குடியிருப்பு.

உந்துருளிக்கான கேள்வி கோரல் விண்ணப்பக் கட்டணம் 200 ரூபா

(4651)


## அம்பாறை வீரமுனைக் கிராமத்தில் சிறார்களுக்கான பின்னூட்டல் வகுப்புக்கள்

(அலுவலக செய்தியாளர்)

போரினால் மிகவும் பாதிப்படைந்த பிரதேசங்களை இனங்கண்டு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் துரித புனர்வாழ்வு சமூக நலன் மேம்பாட்டுத் திட்டங்களைப் பின்தங்கிய கிராமங்களிற்கு நகர்த்தி வருகின்றது.

அந்த வகையில் அம்பாறையில் வீரமுனைக் கிராமத்தில் வாழ்விற்கு அத்தியாவசியமான கல்வியை மேம்படுத்த சிறார்களுக்கான மாலை நேரக் கல்வி வகுப்புக்களை ஒழுங்குபடுத்திக் கொடுத்துள்ளது.

அக்கரைப்பற்று, நாவிதன்வெளி, வீரச்சோலை, மாணிக்கமடு ஆகிய இடங்களில் நடத்தப்பெற்றுவரும் மாலைநேரப் பின்னூட்டல் வகுப்புக்களின் மூலமாக 150 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இலவசமாகக் கல்வி அறிவாற்றலைப் பெற்றுப் பயனடைந்து வருகின்றார்கள். ஆங்கிலம், தமிழ்ப் பாடங்கள், துறைசார்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்பெறுகின்றன. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளையும், வேறு சில உதவிகளையும் வழங்கி வருகின்றது. (தீ)

## வவு.பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் இரு விளையாட்டு இல்லங்கள் திறப்பு

வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் போறூட் நிறுவனத்தால் சிறுவர்களுக்கான இரண்டு விளையாட்டு இல்லங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. வவுனியா பூந்தோட்ட நலன்புரி நிலையத்தில் உள்ள சிறார்களின் வாழ்க்கையினை மேம்படுத்தும் ஒரு அடிப்படை நடவடிக்கையாக இது மேற்கொள்ளப்பட்டிருப்பதாக இந்த நிறுவனங்களுக்குப் பொறுப்பான மதிவதனி சிற்றம்பலம் தெரிவித்தார். நேற்று மாலை 3.30 மணிக்கு யுனிட் ஒன்று பகுதியில் அமைந்த விளையாட்டு இல்லத்தை வவுனியா மாவட்ட திட்டமிடல் அதிகாரி திருமதி. கேதீஸ்வரன் திறந்து வைத்தார். இதனைத் தொடர்ந்து யுனிட் நான்கு பகுதியில் அமைந்த விளையாட்டு இல்லத்தை போறூட் பிரதிநிதி திருமதி. றீன் திறந்துவைத்தார். இந்த இரண்டு விளையாட்டு இல்லங்களிலும் 6-12 வயதுச் சிறார்கள் தமது நடவடிக்கையினை மேற்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்படு கிறது. இந்த நிகழ்வில் நலன்புரி நிலையத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (21)

## கிராமிய பொ. க. ஆ. அ. நிறுவன 3ஆம் தொகுதிப் பயிலுநர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு

கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனமும் ஆசிய ...பான் உறவுப் பால நிறுவனமும் இணைந்து நடாத்தும் தொழிற்பயிற்சி ...வனத்தின் 3ஆம் தொகுதிப் பயிலுநர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர் ...ரும் 23ஆம் திகதி உழவு இயந்திரப் பயிற்சிக்கும், 24ஆம் திகதி ...ளபாடம் அமைத்தல் பயிற்சிக்கும் 25ஆம் திகதி தையற்பயிற்சிக்குமாக நடைபெறும் என தொழிற்பயிற்சி நிலையத்தின் நிர்வாக உதவிப் பணிப்பாளர் செ.மகேந்திரன் தெரிவித்துள்ளார்.


## துளசி மாறன் தனியார் வைத்திய நிலையம் திறப்பு

மாவீரன் துளசிமாறன் (செகராஜசேகரம் தர்மசீலன்) நினைவாக தனியார் வைத்தியசாலை ஆரம்பிக்கப்படவுள்ளது.

திகதி - 18 - 06 - 2004 வெள்ளிக்கிழமை

இல. 24, முறிப்பு வீதி, கனகபுரம், கிளிநொச்சி.

(4711)

# ஈராக் இ.நிர்வாகத்திடம் சதாமைக்கையளிக்க காலவரையறையை நிர்ணயிக்க முடியாது

## -அமெரிக்க சனாதிபதி புஷ் தெரிவிப்பு

**பதவி கவிழ்க்கப்பட்டு, பின்னர் கைதுசெய்யப்பட்டிருக்கும் ஈராக்கிய முன்னாள் சனாதிபதி சதாம் ஹூசைனை, ஏற்படுத்தப்படவிருக்கும் ஈராக்கிய இடைக்கால நிர்வாகத்திடம் ஒப்படைக்கும் கால எல்லையை நிர்ணயிக்க முடியாதென அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் தெரிவித்துள்ளார்.**

அவர் மீதான விசாரணைகள் இன்னும் மேற்கொள்ளப்படாத நிலையில் அவரது ஒப்படைப்பு தொடர்பாக அமெரிக்கா பூரண கவனம் செலுத்தும் அதேவேளை ஈராக்கில் அவருக்கான பூரண பாதுகாப்பு இல்லாத நிலையும் இந்த முடிவிற்குக் காரணமென புஷ் தெரிவிக்கிறார்.

எனினும் எதிர்வரும் யூன் மாதம் 30 ஆம் திகதி ஈராக்கிய இடைக்கால நிர்வாக அதிகாரத்தினைக் கையளிக்க முன்னர் சதாம் ஹூசைன் ஒப்படைக்கப்பட வேண்டுமென்று ஈராக்கிய சனாதிபதி இஸான் அலாவி தொலைக்காட்சியொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போது தெரிவித்தார்.

இதேவேளையில் எதிர்வரும் யூன் மாத இறுதிக்குள் சதாம் விடுவிக்கப்படவேண்டும் அல்லது சதாம் மீதான குற்றங்கள் நிருபிக்கப்பட வேண்டும்மென்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கோரிக்கை விடுத்திருக்கிறது.

ஈராக்கிய யுத்தக் குற்றங்களுக்கான நீதிமன்றின் விசேட நீதிபதியான சலீம் சலாபி கருத்துத் தெரிவிக்கும் போது சதாம் ஹூசைனுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் விரைவில் மேற்கொள்ளப்பட்டுவிடும் எனத் தெரிவித்துள்ளார்.



அண்மையில் தாக்குதலுக்கு உள்ளான ஈராக்கிலுள்ள பிரதான (கிர்குக்-துருக்கி) எண்ணெய் விநியோகக் குழாய் தற்போது திருத்தப்பட்டுக்காணப்படுகிறது. (தாக்குதலின் போது பிரதான பாதுகாவலர் கொல்லப்பட்டார்)

# அல்-ஹைதா உறுப்பினரை சவுதி அரசு விடுவிக்காவிடின் அமெ. கைதியைக் கொல்வோம்

## -72 மணி நேரக் காலக்கெடுவும் விதிப்பு

(றியாத்)

சவுதி அரேபியாவினால் கைது செய்யப்பட்ட அல்-ஹைதா உறுப்பினர்களை 72 மணி நேரத்திற்குள் விடுதலை செய்யவேண்டும் இல்லையேல் போல் ஜோன்சன் என்ற அமெரிக்கரைக் கொனறுவிடுவோம் என அல்-ஹைதா அமைப்பினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

றியாத் நகரில் அமெரிக்கர் ஒருவரின் படத்தை உள்ளடக்கிய வகையில் அல்-ஹைதா தீவிரவாதிகள் விடுத்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில் அரேபியக் குடாநாட்டின் அல்-ஹைதா இயக்கத்தின் தலைவர் கைச்சாத்திட்டுள்ளார்.

சவுதி அரேபியாவில் அவ்வப்போது தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் இடம் பெற்று வருகிறது. இந்தநிலையில் போல் ஜோன்சன் என்ற அமெரிக்கர் அல்-ஹைதா இயக்கத்தினரால் பணயக் கைதியாக வைக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

இதேவேளை சவுதி அரேபிய அரசாங்கத்தின் வெளிவிவகார ஆலோசகர் கருத்துத் தெரிவிக்கையில்:

இந்த நிலைமை தொடர்பாக சவுதி அரேபிய அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகவும்; அதே வேளை அமெரிக்காவுடன் ஆலோசனை நடத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார். பயங்கரவாதிகளுடன் எந்த விதப் பேச்சுவார்த்தைகளையும் நடத்துவதில்லை என்பதே அரசாங்கத்தின் கொள்கையாகுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# செப்-11 தாக்குதலை நடத்த அல்-ஹைதாவிற்கு ஈராக் உதவியதென்பதற்கு ஆதாரமில்லை

## அமெரிக்க விசாரணை ஆணைக்குழு அறிக்கை

(லண்டன்)

அமெரிக்காவின் நியூயோர்க் மற்றும் வோஷிங்டன் ஆகிய இடங்களில் இடம் பெற்ற செப்ரெம்பர் - 11 தாக்குதலை நடத்துவதற்கு அல்-ஹைதா அமைப்பிற்கு ஈராக்கின் சதாம் ஹூசைன் அரசாங்கம் உதவியது என்று கூறுவதற்கு நம்பகரமான ஆதாரம் எதுவும் கிடையாது என்று இந்தத் தாக்குதல் குறித்து விசாரணை நடத்திவரும் அமெரிக்க ஆணைக்குழு முடிவாக அறிவித்துள்ளது.

அல்-ஹைதா அமைப்பின் தலைவர் ஒசாமா பில்லேடன் 1994 ஆம் ஆண்டு ஈராக்கிய உயர் அதிகாரி ஒருவரைச் சூடானில் சந்தித்துள்ளார். இதன்போது தீவிரவாதிகளுக்கான பயிற்சி முகாம்களை ஈராக்கில் அமைப்பதற்கு அனுமதிக்குமாறு ஒசாமாபின் லேடன் விடுத்த கோரிக்கைக்கு ஈராக் பதிலளிக்கவில்லை. அதற்குப் பின்பும் இருதரப்பினரும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். ஆனால் இருதரப்பிற்குமிடையே ஒத்துழைப்புடனான உறவு ஏற்படவில்லை என்றும் ஆணைக்குழுவின் அறிக்கை தெரிவித்துள்ளது. ஈராக் மீதான யுத்தத்தை நியாயப்படுத்தும் வகையில் ஈராக்கிற்கும் அல்-ஹைதா அமைப்பிற்குமிடையே தொடர்பு இருந்ததாக அமெரிக்கா அடிக்கடிகூறி வந்தது இந்த நிலையில் ஆணைக்குழுவின் அறிக்கை வெளியாகியுள்ளது.

இதேவேளை தற்போதும் அமெரிக்காவிற்கு அச்சுறுத்தலாக அல்-ஹைதா அமைந்துள்ளது முன்னரை விடக் குறைவான நிதியில் செயற்படவும் அல்-ஹைதா கற்றுக்கொண்டு விட்டது என்ற கருத்துக்களை அந்த ஆணைக்குழு ஒப்புக் கொண்டுள்ளது.


அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தி பெரிய அளவில் உயிர்ச்சேதத்தை ஏற்படுத்த அல்-ஹைதா இப்போதும் முயல்கிறது. உயிரியல் ஆயுதங்களைப் பெற முயல்கிறது. இது தொடர்பாக எச்சரிக்கை செய்யவேண்டும் என்றும் அந்த ஆணைக்குழு கூறியுள்ளது.

# யு.என்.எச். சி.ஆர். இவ்வருட அகதிகள் தினத்தை "இல்லிடம் என்று அழைக்க ஓர் இடம்" என்ற கருப் பொருளில் அனுஷ்டிக்கும்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஸ்தானிகர் ஆலயம் இவ்வருடத்திற்கான அகதிகள் தினத்தை "இல்லிடம் என்று அழைக்க ஓர் இடம்" என்ற கருப் பொருளில் அனுஷ்டிக்கவுள்ளது.

வரும் இருபதாம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள இந்த அகதிகள் தினம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஸ்தானிகராலய ஆணையாளர் விடுத்துள்ள செய்தியில்; உலகிலுள்ள அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள் தங்களின் இல்லம் என்று அழைக்கக்கூடிய இல்லிடத்தை அமைக்க எடுக்கும் அவர்களின் உறுதியான முயற்சி களுக்கு உதவுவதே அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் ஆலயத்தின் முக்கிய பணியாகும் என்று கூறினார். இந்தப் பணிகளை ஐம்பது வருடத்திற்கும் மேலாகச் செய்து வருகின்றோம் என்றார்.




அண்மையில் சிட்னியில் நடைபெற்ற சீனாவின் சங்ஹாய் நகரின் சர்க்கஸ் குழுவினரின் சாகாஸ நிகழ்வுகள். அவுஸ்திரிரேலியப் பயணத்தை முடித்துக்கொண்டு அவர்கள் அமெரிக்கா சிறிலங்கா ஐக்கிய அரபு எமிரேட் தாய்லாந்து போன்ற நாடுகளுக்கும் [illegible] பம் செய்வர்.

# போதைப்பொருள் கடத்தற்காரரால் கொலம்பியாவில் 34 பேர் சுட்டுக்கொலை

(லண்டன்)

கொலம்பியாவில் போதைப் பொருள் கடத்தற் கும்பலைச் சேர்ந்தவர்கள் 34 விவசாயிகளைச் சுட்டுக் கொன்றுள்ளனர். உலகில் மிகப்பெரிய போதைப் பொருள் கடத்தற் காரர்களைக் கொண்டது கொலம்பியா. இங்கு கொலம்பிய இராணுவத்திற்கும், போதைப் பொருள் கடத்தற் காரர்களுக்கும் இடையே அடிக்கடி மோதல் ஏற்படுவது வழக்கம். இந்த நிலையில் நேற்று முன்தினம் கொலம்பியாவின் எல்லையோரத்தில் அமைந்துள்ள லாக்கபாரா எனும் நகரில் கொக்கையின் எனும் போதைப்பொருளைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் கொக்கோ இலைகளை இராணுவத்தினருக்கு விவசாயிகள் விற்றுள்ளனர் என்றே 34 விவசாயிகளைப் போதைப் பொருள் கடத்தற்காரர்கள் கடத்திச் சென்று சுட்டுக் கொன்றுள்ளனர்.

கைகள், கால்களை கயிற்றினாற் கட்டி இவர்களைச் சுட்டுக் கொன்றுள்ளதாகக் கொலம்பிய இராணுவம் கூறியுள்ளது. இந்தச் சம்பவத்தையடுத்து கொலம்பியாவில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.



பாங்கொக்கின் பாட்பங் வீதியில் நித்திரை கொள்ளும் அகதிச் சிறுவன் ஒருவன் (தற்போது இவ்வீதியில் மதுச்சாலைகளும், களியாட்ட விடுதிகளும் நிறைந்துகாணப்படுவதால் அவற்றை பி.ப 2மணியுடன் மூடிவிட அரசு உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது).

# பயணிகள் பேருந்து பள்ளத்தில் வீழ்ந்தது

## பாகிஸ்தானில் 40 பேர் உயிரிழப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் வீதிவிபத்து ஏற்பட்டதில் 40 பேர்பலியாகியுள்ளனர். பாகிஸ்தான்தலைநகர் இஸ்லாமாபாத்திற்கு அருகேயுள்ள வீதியிலேயே இந்தவிபத்து நேற்று ஏற்பட்டுள்ளது.

பயணிகளை ஏற்றிச்சென்ற பேருந்து ட்றக் வண்டியுடன் மோதியது. பின்னர் அருகிலுள்ள பாலத்துடன்மோதிப் பாலத்தை உடைத்துக் கொண்டு பாலத்தினுள் வீழ்ந்துள்ளது என்று பாகிஸ்தான் பொலிஸ் அதிகாரிகள் கூறியுள்ளனர்.



மணிலாவில் சேவையிலீடுபட்டுள்ள படகு பயணிகளுடன் தள்ளாடுகிறது.

# வெடிபொருட்களின் அச்சுறுத்தலைத் தவிர்க்க விழிப்புடன் செயற்படுவது அவசியமாகும்

## -வெண்புறா நிறுவனம் வலியுறுத்து

(கிளிநொச்சி)

**கண்ணிவெடிகள் மற்றும் வெடிபொருட்களின் அச்சுறுத்தலிலிருந்து எம்மை நாமேபாதுகாத்துக் கொள்ள விழிப்புடன்செயற்படுமாறு வெண்புறா செயற்கை உறுப்பு தொழில் நுட்ப நிறுவனம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.**

'கண்ணிவெடி விழிப்புணர்வு அறைகூவல்' என்ற தலைப்பில் அது துண்டுப் பிரசுரமொன்றை வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

கண்ணிவெடிகள் மற்றும் வெடிக்காத வெடி பொருட்களின் ஆபத்திலிருந்து உங்களை நீங்களே பாதுகாத்துக் கொள்ளும் படி மீண்டுமொரு முறை ஞாபகப்படுத்துகிறோம். கண்ணுக்குத் தெரியாமல் உங்கள் காலடியிலேயே காத்திருக்கும் கொடிய அரக்கனை உங்கள் கவனத்தினால் விரட்டி அடியுங்கள் உங்கள் உயிரையும் உடல் உறுப்புக்களையும் வீணாக இழந்துவிடாமலிருக்க உங்கள் கவனமே மிகமுக்கியம் என நினையுங்கள்.

ஆபத்தான இடங்களுக்குச் செல்லாதீர்கள் சந்தேகத்திற்கிடமான பொருட்களைத் தொடாதீர்கள். அறிவிப்புப் பலகைகளையும், அபாயக் குறியீடுகளையும் அலட்சியம் செய்யாதீர்கள். உங்கள் குடியிருப்புப் பகுதிகளில் ஏதாவது வெடிபொருட்களைக் கண்டாலோ அல்லது அவைகள் இருக்கலாம் என்று நீங்கள் கருதினாலோ உடனே உங்கள் அருகாமையிலுள்ள வெண்புறா கண்ணிவெடித் தொடர்பகத்திலோ அல்லது உங்கள் கிராம சேவையாளரிடமோ தகவல் தாருங்கள்.

கண்ணிவெடி அகற்றும் பணியாளருக்கு உங்கள் பூரண ஒத்துழைப்பினை வழங்கி அவர்களின் அறிவுரைகளைக் கேட்டு நடவுங்கள். புதிய இடங்களுக்குச் செல்லும் போது விழிப்புடன் செயற்படுங்கள்.பாதுகாப்பான பிரதேசம் என்று அறிவிக்கப்படாத இடங்களுக்குச் செல்வதையோ அங்கே குடியேறுவதையோ தவிருங்கள். நீங்கள் அறிந்தவைகளை உங்கள் குழந்தைகளுக்கும் அயலவர்களுக்கும் சொல்லி வையுங்கள்.

அன்பானவர்களே! எமது மக்களை கண்ணிவெடிகள் மற்றும் வெடிபொருட்களின் ஆபத்திலிருந்து பாதுகாப்பது எமது கடமை என்பதை மறவாதீர்கள் நம்மை நாமே பாதுகாத்துக் கொள்ள இதுவே சிறந்தவழியாகும்.

### போட்டி விண்ணப்பம் நீடிப்பு

உலக அகதிகள் தினத்தினை முன்னிட்டு யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தினால் நடாத்தப்பெறவுள்ள சைக்கிள் ஓட்டப்போட்டி விண்ணப்ப முடிவுத் திகதி இம் மாதம் 19ஆம் திகதிவரை நீடிக்கப்பெற்றுள்ளதென கிளிநொச்சி யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர். (சோ)

# புனர்வாழ்வு உதவிகளைக் கோரும் வவுனியா கல்மடுப் பிரதேச மக்கள்

## வாக்குறுதிகளால் விரக்தி

(அலுவலகசெய்தியாளர்)

கடந்த கால்இராணுவநடவடிக்கைகளால்மோசமாகப் பாதிக்கப்பெற்று மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ள வவுனியா கல்மடு பிரதேசத்தில் புனர்வாழ்வு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதாகக் கூறிக்கொள்ளும் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் வாக்குறுதியினை வழங்கிச் செல்கின்றனரே தவிர தமக்குப் போதிய ளவு உதவிகள் கிடைக்கவில்லை என கல்மடுப் பிரதேச மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

தற்போது கல்மடு பிரதேசத்திற்கு 119 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ள போதும், அடிப்படை வசதிகள் எதுவும் அற்ற நிலையிலேயே காணப்படுகின்றனர்.

கல்மடு கிராமத்திற்கு போக்குவரத்து வசதிகள் இன்மை, வைத்தியசாலை இன்மை, பாடசாலையில் ஆசிரியர்கள் பற்றாக்குறை என்பன பெரும் பிரச்சினையாகவே உள்ளன. பாம்புக் கடிக்கு இலக்கானவர்களைக் கூட 20 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள வவுனியா மாவட்ட வைத்தியசாலைக்கு கால் நடையாகவே கொண்டு செல்ல வேண்டிய நிலையில் மக்கள் துன்பப்படுகிறார்கள். (தீ)

# இடம்பெயர் சேவை மூலம் கடவுச்சீட்டு வழங்க ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

இடம்பெயர் சேவை மூலம் கடவுச்சீட்டு வழங்குதல் கிளிநொச்சி அரச அதிபர் செயகத்தில் எதிர்வரும் 24, 25 ஆகிய திகதிகளில் காலை 9.00 மணிதொடக்கம் மாலை 4.00 மணிவரை நடைபெறவுள்ளது. இதில்குடிவரவு,குடியகல்வு திணைக்களஅதிகாரிகள் வருகை தந்து, விண்ணப்பங்களை ஏற்று விரைவில் கடவுச்சீட்டுக்களை வழங்க நடவடிக்கை எடுக்கவுள்ளார்கள்.

எனவே கிராம அலுவலர்களிடம் கடவுச்சீட்டு விண்ணப்பங்களைப் பெற்று, விண்ணப்பத்தின் பிற்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் படியும் இணைக்கப்பட்ட மேலதிக அறிவுறுத்தல்களின் படியும் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து 20.06.2004 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலர் பணிமனையில் கையளித்து பயன் பெறுமாறு கரைச்சிப் பிரதேச செயலர் பொன்.நித்தியானந்தம் வேண்டியுள்ளார். (சோ.)

# 3-ஆம் கட்ட கணினிப் பயிற்சி வகுப்பு

(அலுவலக செய்தியாளர்)

சமுதாய முன்னேற்ற நிலையமும்,கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களமும் இணைந்து வடக்கு தொழில் பயிற்சி நிலையத்தால் மூன்றாம் கட்ட கணினி பயிற்சி வகுப்புக்கள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதில் முதற் கட்டமாக ஆரம்பிக்கப்பட்டபயிற்சி வகுப்பில் 50 மாணவர்களும், இரண்டாம் கட்டமாக ஆரம்பிக்கப்பட்ட பயிற்சி வகுப்பில் 42 மாணவர்களும் பயிற்சி பெற்று வெளியேறியுள்ளனர்.

தற்போது ஆரம்பமாகியுள்ள மூன்றாம் கட்டவகுப்பில் 47 மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.முதல் இரண்டு கட்டமாக ஆரம்பிக்கப்பட்ட பயிற்சி வகுப்புக்களும் 6மாத காலவரையறையைக் கொண்டது. தற்போது ஆரம்பமாகியுள்ள மூன்றாம் கட்டப்பயிற்சிவகுப்பு9மாதகால வரையறையைக்கொண்டதாகும். (தீ)

## -வவுனியா- மன்னார் மாவட்டங்களில்-

# சிறிலங்கா இராணுவ வெடிபொருட்களில் சிக்கி இதுவரை நாற்பது பேர் பாதிப்பு!

வவுனியா - மன்னார் மாவட்டங்களில் இராணுவ நடவடிக்கையின் போது புதைக்கப்பட்ட வெடி பொருட்களில் சிக்கி இதுவரை 40 பேர் பாதிப்புக்குள்ளாகி இருப்பதாக எ.'.ப்.எஸ்.டி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுவரை தமது அணியினரால் மன்னார்,வவுனியா பிரதேசங்களில் 135,887 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு துப்புரவு செய்யப்பட்டு இருப்பதாகவும், இதன் இணைப்பாளர் பாலா தெரிவித்தார். அத்துடன் தம்மால் வவுனியா மன்னார் மாவட்டங்களில் 196 கிராமங்களில் வெடிபொருட்கள் இருப்பதாக இனம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

தம்மால் வெடிபொருட்கள் அகற்றப்பட்ட பிரதேசங்களிலிருந்து மிதிவெடிகள் 4,491 கனரக வாகனத் தகர்ப்பு வெடிபொருள் 8, கைக்குண்டு, செல், பரா செல், சிறிய ரக வெடிபொருட்கள் 4,423, புரப்பரைட்டர்கள் 75,207 மற்றும் பல வெடிபொருட்களும் மீட்கப்பட்டு இருப்பதாக எ.'.ப்.எஸ்.டி நிறுவனம் தெரிவித்துள்ளது. வவுனியாவில் ஓமந்தை, தாண்டிக்குளம், மல்லவராயன் கட்டையடம்பன், தலைமன்னார், பியர், பேசாலை போன்ற பிரதேசங்களில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு மக்களின் வாழ்வுக்கு உறுதிப்படுத்தப்பட்டு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தற்போது வவுனியா தாண்டிக்குளம், வவுனியா மன்னார், வீதி, மன்னாரின் சில இடங்களிலும் தமது அணியினர் பணிகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளனர். வவுனியா தாண்டிக்குளம் பாடசாலையில் இராணுவத்தால் கைவிட்டுச்செல்லப்பட்டதாகக் கருதப்படும் வெடிபொருட்களை எ.'.ப்.எஸ்.டி நிறுவனம் அகற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது.



மீட்கப்பட்ட ஒரு பகுதி எறிகணைகள்

# விவசாயக் கடன் வழங்கல்

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் விவசாயிகளுக்கு கடன் அடிப்படையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவில் வட்டக்கச்சி பிரதேசப் பசுமை வேளாண் சேவையூடாக கடன் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 14ஆம் திகதி வரை 45பயனாளிகளுக்கு மொத்த விவசாய உள்ளீட்டுப் பணமாக ஒன்பது இலட்சம் ரூபா கடனாக வழங்கப்பட்டது.(12)

# கட்டுக்கரைக் குளத்தின் கழிவுநீர் வாய்க்காலைப் புனரமைத்து உதவுக!

(அலுவலக செய்தியாளர்)

மன்னார், கட்டுக்கரைக் குளத்தில் இருந்து கழிவுநீரைக் கடலுக்குக் கொண்டு செல்லும் வாய்க்கால் புனரமைப்பு முழுமைப் படுத்தப்படாதமையால் விவசாயிகள்பெரும் பாதிப்படைந்து வருகின்றனர்.

மேற்படி குளத்தில் இருந்து வெளியேற்றறப்படும் கழிவுநீரை குளத்தில் இருந்து கடலுக்குக் கொண்டு செல்லும் கழிவு நீர் வாய்க்கால் முழுமையாக புனரமைக்கப்படாத நிலையில் கழிவுநீர் கடலுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேற்படி வாய்க்கால் தூர்ந்து போயும், புற்கள், பூடுகள் முளைத்திருப்பதனாலும் கழிவுநீர் கடலைச் சென்றடைய முடியாத நிலை உருவாகியது. இந்த நிலையால் அப்பகுதியில் உள்ள வயல் நிலங்களினூடாகச் சென்றே, கடலை அடைகின்றது. இந்த நிலையில் அப்பகுதி விவசாயிகள் பூரண நம்பிக்கையுடன் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடமுடி யாத நிலை உருவானது.

கட்டுக்கரைக் குளத்தில் இருந்து கடலுக்கு மேற்படி கழிவு நீரை கொண்டு செல்கின்ற வாய்க்காலின் 3Km நீளவாய்க்கால் புனரமைக்கப்பட்டது. ஏனைய வாய்க்கால் பகுதிகள் எவையும் புனரமைக்கப்படவில்லை. இதனால் குளத்தில் இருந்து வாய்க்கால் புனரமைப்புச் செய்யப்பட்ட தூரம் வரையான விவசாய நிலங்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் வாய்க்கால் ஊடாக வருகின்ற கழிவுநீர் அடம்பன் தாழ்வுக்கமத்தில் உள்ள வயல்நிலங்களின் ஊடாக பாய்ந்து நாயாற்று வெளியை சென்றடைந்து அவ்வாறு விடத்தல் தீவுக்கடலை சென்றடைகிறது. இதனால் மேற்படி பகுதிகளில் கமத்தொழிற்செய்கையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. சிலவேளைகளில் கழிவுநீர் அதிகளவில் வருகின்ற போது தமது வயல்கள் முற்றாக பாதிக்கப்படுகிறது. எனவே குளத்தில் இருந்து 3Km நீளம்வரையான வாய்க்கால் புனரமைப்புச் செய்யப்பட்டு, அதனுடன் அண்டிய வயல் நிலங்களுக்கு உத்தரவாதமளிக்கப்பட்டதைப் போல ஏனைய பகுதிகளினூடாகச்செல்லும் கழிவு நீர் வாய்க்காலையும் புனரமைத்து விவசாய நடவடிக்கைக்கு உதவுமாறும் விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (லோ,தீ)

# வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசிகள் கடந்த இரு மாதங்களாகப் பிரதேச ரீதியாக வழங்கப்பட்டு வருகின்றது. மே மாதத்தில் வற்றாப்பளையில் 200 நாய்களுக்கும், முள்ளியவளையில் 192 நாய்களுக்கும் வழங்கப்பட்டது.இதேபோன்று யூன் மாதத்தில் அளம்பில் பகுதியில் 84, செம்மலைப்பிரதேசத்தில் 126 நாய்களுக்கும் வழங்கப்பட்டது. தொடர்ச்சியாக வழங்கப்பட்டும் வருகின்றது.இதுவரை 69 கட்டாக்காலி நாய்கள் அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (20)

# புளியங்குளம் பேருந்து நிலையத்தில் பயணிகள் இருவருக்கு நேர்ந்த அவலம்

(கிளிநொச்சி)

புளியங்குளத்திலிருந்து கிளிநொச்சி நோக்கிப்பயணிகளை ஏற்றி வரும் கைஏஸ் வாகன உரிமையாளரின் முறையற்ற செயலினால் பயணிகள் இருவர் மிகவும் அசௌகரியத்திற்குள்ளாகியுள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து பாதிக்கப்பட்ட பயணி ஒருவர் தெரிவிக்கையில்; "புளியங்குளத்தில் இருந்து கிளிநொச்சி வருவதற்காகப் பிற்பகல் 2.00 மணியளவில் ஒரு கைஏஸ்வானில் ஏறியிருந்தேன். அரைமணி நேரத்தின் பின் ஐந்து பேர் என்னைப் போன்று ஏறியிருந்தனர். 10 பேர்சேர்ந்தால் போகலாம் எனச் சாரதி கூறினார். சிறிது நேரத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏழு பேர்வந்தனர்.இவர்களைக் கண்டதும் வானுக்குள் முக்கால் மணித்தியாலயத்திற்கும் மேலாக ஏறியிருந்த என்னையும், வயதுமுதிர்ந்த ஒருபெண்மணியையும் கீழே இறக்கி விட்டுவிட்டு வான் கிளிநொச்சியை நோக்கி புறப்பட ஆயத்தமாகியது. இந்த நிலையில் நான் சாரதியின் முறையற்ற செயலை எடுத்துக்கூறினேன். எம்மை அடுத்த வானில் வருமாறு கூறி வானை எடுத்துச் சென்று விட்டார். இவரின் இந்தச் செயற்பாடு எமக்கு மன வேதனையையும் எமக்கு ஒரு அவலத்தையும்உண்டு பண்ணியது" என்றார்கிளிநொச்சியில் நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் உயரதிகாரி ஒருவர்.

# "கார்ப்" திட்டத்தின் கீழ் மேலும் 28 கிராமங்களுக்கு மின்சாரம்

**குடாநாட்டின் மேலும் சில கிராமங்களிற்கு மின்சார வசதிகளை வழங்குவதற்காக கார்ப் (CARRP) திட்டத்தின் கீழ் 506 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

கடந்த கால யுத்த அனர்த்தங்களால் பெரும் பாதிப்பிற்குள்ளானதும் பின் தங்கிய நிலையிலுள்ளதுமான 28 கிராமங்களுக்கே இம்மின் விநியோகம் இடம்பெறவுள்ளது.

தீவுப்பகுதிகளான புங்குடுதீவு, ஊர்காவற்துறை, கரம்பன், நாரந்தனை, சரவணை மற்றும் அல்லைப்பிட்டிப் பகுதிகளுக்கும் வடமராட்சிகிழக்கின் மணற்காடு, மணற்காடுவடக்கு, குடத்தனை மற்றும் குடத்தனைவடக்குப் பகுதிகளுக்கும் தென்மராட்சின் கப்புதூ, நாவற்காடு, மிருசுவில்வடக்கு, கச்சாய்,இடைக்குறிஞ்சி, கரம்பைக்குறிஞ்சி, கல்வயல், சரசாலை, உசன் மற்றும் தச்சன் தோப்பு பகுதிகளிற்கும் வலிகாமத்தின் சில்லாலை,அராலித்துறை மற்றும் சங்கானைப்பகுதிகளுக்குமே மின்சார விநியோகத்தை மேற்கொள்ள இந்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை காரை நகரூடாக ஊர்காவற்துறை, வேலணைப் பகுதிகளுக்கும் மற்றும் நெடுந்தீவு,அனலைதீவு மற்றும் எழுவை தீவுப் பகுதிகளுக்கும் முழு நேர மின்சாரம் வழங்கும் மதிப்பீடுகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றது. (27)

# யாழ்.பல்கலை. ஊழியரின் வேலை நிறுத்தம் தொடர்கிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக ஊழியர்கள் மேற்கொண்டு வரும் வேலை நிறுத்தம் நேற்று மூன்றாவது நாளாகவும் தொடர்கிறது.

தமது கோரிக்கைகள் நிறைவேற்றும்வரை தமது போராட்டம் தொடரும் என ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

ஊழியர் நியமனங்கள் அவர்களுக்கான கொடுப்பனவுகள் மற்றும் தனியார் மயமாக்கலுக் கெதிரான கோரிக்கைகள் போன்றவற்றை முன்வைத்து சுமார் 300 பேர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபடாத எழுது வினைஞர்கள், நிறுவாகத்தினர் ஏனைய உத்தியோகத்தர்கள் போன்றோர் பல்கலைக்கழக நடவடிக்கைகளுக்கு உதவுவதாக உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். இதே வேளையில் தற்போது யாழ். பல்கலைகழகத்தில் நடைபெற்றுவரும் பட்டப்பின்படிப்புப் பரீட்சை பல சிரமங்களுக்கு மத்தியில் நடைபெற்றுவருவதாக பல்கலைக்கழக பதிவாளர் திருமதி.என்.தங்கராஜா தெரிவித்தார்.இதே வேளை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வரும் ஊழியர் சங்கப் பிரநிதிதிகளுடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுவருவதாகவும் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

# கணவனை இழந்த பெண்களுக்கு வலிகாமத்தில் புனர்வாழ்வுத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலிகாமம் பிரதேசத்தில் வாழும் போரினால் கணவன்மாரை இழந்த பெண்களுக்கான புனர்வாழ்வுத் திட்டம் ஒன்று நடைமுறைபடுத்தப்படவுள்ளது.

கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளினாலும், படையினரது குண்டுத் தாக்குதல்களாலும் படையினரின் கெடுபிடி நடவடிக்கைகளாலும் தனது கணவன்மாரை இழந்து வாழும் குடும்பப்பெண்களினது மேம்பாடுகளைக் கவனத்தில் கொண்டே இப்புனர்வாழ்வுத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

வலிகாமம் பிரதேசத்திலுள்ள பிரதேசச்செயலகங்களூடாக நடைமுறைப்படுத்தப்படவுள்ள இத்திட்டங்களின் கீழ் சுயதொழில் ஊக்குவிப்பு, கடன் உதவிகள், மற்றும் பொருளாதார மேம்பாட்டு உதவிகள் என்பன வழங்கப்படவுள்ளன. (33)

# மீளக்குடியேறிய மக்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருக

## -புளியங்கூடல் மக்கள் அமைப்பு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.தீவகத்திலுள்ள ஊர்காவற்துறை புளியங்கூடல் பிரதேசத்தில் மீளக்குடிமரச் சென்றுள்ள மக்கள் அடிப்படை வசதிகள் அற்ற அவலவாழ்வு வாழ்ந்து வருகின்றனர்.

கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் மேற்படி பிரதேசங்களில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் தற்பொழுதுள்ள யுத்தநிறுத்த சூழ்நிலையைப் பயன்படுத்த மீளக்குடியமரச் சென்றுள்ளனர்.

அந்தவகையில் தற்பொழுது இங்கு 312 குடும்பங்களைச் சேர்ந்த 1126பேர் மீளக்குடியமர்ந்துள்ள போதிலும் இவர்களில் 170 குடும்பங்கள் மட்டுமே தமது சொந்த இடங்களில் குடியமர்ந்துள்ளன. ஏனைய குடும்பங்கள் தற்காலிக வாழ்விடங்களில் வாழ்ந்து வருகின்றன.

இவ்வாறு மீளக்குடியமரச் சென்றுள்ள மக்களினுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ளவில் இக்கிராமத்தில் அடிப்படை வசதிகள் காணப்படவில்லை. இவற்றால் இப்பகுதிகளில் மீளக்குடியமரச் சென்றுள்ள மக்கள் பெரும் இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். எனவே இப்பகுதி மக்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க முன் வருமாறு அப்பகுதி பொது அமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (33)

# பொன்னாலையில் காவல் நிலையை பலப்படுத்தும் கடற்படையினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொன்னாலை வடக்கில் உள்ள பாதுகாப்பு வலய முன்னரங்க காவல் நிலைகளைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளில் கடற்படையினர் மும்முரமாக ஈடுபட்டுவருகின்றனர். கடந்த சில நாட்களாக இடம்பெற்று வரும் இப்பலப்படுத்தல் நடவடிக்கைகளின் போது மேற்படி பகுதியிலுள்ள முன்னணி காவல் அரண்கள் மண்மூடைகள் மரக்குற்றிகள் என்பன இட்டு பலப்படுத்தப்பட்டு வருவதுடன் முட்கம்பி வேலிகளும் புதிதாக அமைக்கப்பட்டு வருகிறது. படையினரது இவ்வாறான நடவடிக்கை அப்பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கையை பாதிப்பதாக மக்கள் பலர் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். (33)

# யாழ்.வீதி புனரமைப்பிற்கு கருங்கற்கள் பாவிக்க யோசனை

கார்ப் (CARRP) திட்டத்தின் கீழ் அமைக்கப்படவுள்ள யாழ். கண்டிவீதி வேலைக்கு கருங்கற்களைப் பயன்படுத்த வேண்டுமென ஆலோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. அண்மையில் யாழ். செயலகத்தில் இடம் பெற்ற கூட்டமொன்றிலேயே இவ் ஆலோசனை முன் வைக்கப்பட்டுள்ளது.

தற்போது குடாநாட்டினில் வீதி வேலைகளுக்கு சுண்ணாம்புக் கற்களே பயன்படுத்தப்படுவதாகவும் எனினும் அக்கற்கள் கூட போதியளவில் இல்லாதிருப்பதைக் கருத்தில்கொண்டும் அத்துடன் கண்டி வீதியில் முன்னர் எதிர்பார்க்கப்பட்ட வாகனங்களைவிட கனரக வாகனங்கள் கூடுதலாகப் பயணிப்பதால் சுண்ணாம்புக்கற்கள் சிதைவடைந்து வருவதாலுமேயே கருங்கற்களைப் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி "கார்ப்" திட்டத்தின்கீழ் யாழ்.மாவட்டத்தில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்வதற்கென 365.8 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிதியில் மிருசுவில் தொடக்கம் யாழ்.நகரம் வரையான கண்டிவீதி நிர்மாணம் இடம்பெறவுள்ளது.

அத்துடன் இவ்வீதிக்கு இணைநததாக பஸ்தியன் சந்திப் பகுதியிலிருந்து சுண்டுக்குளி வீதியூடாக நாவற்குழி பாலத்தில் வந்து சந்திக்கின்ற வகையிலான மாற்றுப் பாதையொன்றினை அமைக்கவும் இந்நிதியில் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படவுள்ளது. (27)

# ஒவ்வொரு பேருந்தும் பயணிக்கும் ஒரு கி.மீற்றருக்கு எட்டு ரூபா 26 சதம் நட்டம் ஏற்படுகிறது

## -வடபிராந்திய போக்குவரத்துச் சபை தகவல்

குடாநாட்டில் சேவையிலீடுபட்டிருக்கும் பேருந்துகள் ஒவ்வொன்றும் பயணிக்கும் ஒவ்வொரு கிலோமீற்றர் தூரத்திற்கும் 8ரூபா 26சதம் என்ற விகிதத்தில் நட்டத்தை ஏற்படுத்தி வருவதாக வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ்.அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந் நட்டம் குறைவான பேருந்துகள் குடாநாட்டில் சேவையிலீடுபடுவதாலேயே ஏற்படுவதாகவும் அவ்வட்டாரங்கள்மேலும் தெரிவிக்கின்றன.

இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் 100 பேருந்துகள் தற்போது உள்ளதாகவும் அவற்றில் 90 பேருந்துகள் மட்டுமே சேவையில் ஈடுபடக்கூடிய நிலையில் தற்போது இருப்பதாகவும் மேலும் கூறப்படுகின்றது.

எனினும் இயல்புநிலை இருந்த வேளையில் 143 பேருந்துகள் முன்னர் சேவையிலீடுபட்டிருந்ததாகவும் தற்போது மேலும் 50 பேருந்துகள் கிடைக்கப்பெற்றால் முன்பிருந்தது போன்று போக்குவரத்து சேவையினை சுமுகமாக நடாத்த முடியுமெனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

அத்துடன் கூடிய பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்துவதன் மூலம் நட்டத்தில் இயங்கும் போக்குவரத்துச் சபையினை இலாபத்தில் நடாத்த முடியுமெனவும் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. (27)

# யாழ். சுப்பிரமணியம் பூங்காவை புனரமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுப்பிரமணியம் பூங்காவினை புனரமைக்கும் பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

யாழ்.கோட்டைக்கு அண்மையாக அமைந்திருந்த மேற்படி பூங்கா கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் போது படையினரால் அழித்து நாசம் செய்யப்பட்டது.

இதனால் யாழ்.மாவட்டத்துச் சிறார்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் ஏற்பட்ட தாக்கங்களைக் கருத்திற்கொண்டே மேற்படி பூங்கா ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்டு வருகிறது. (33)

# குடாநாட்டின் கைத்தொழில் துறையை மேம்படுத்த ஆ.அ.வங்கி நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் துறைகளை மேம்படுத்துவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

கடந்தகால யுத்த அனர்த்தங்களால் கடுமையான பாதிப்புகளுக்குள்ளாகியிருக்கும் யாழ்.குடாநாட்டின் பொருளாதார அபிவிருத்திகளை மேம்படுத்துதலை நோக்காகக் கொண்டே ஆசிய அபிவிருத்திவங்கி இந்நடவடிக்கைகளை எடுத்துள்ளது.அந்தவகையில் யாழ்.குடாநாட்டில் உள்ள கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு ஊக்குவிப்பையும், தொழில்சார் அறிவுரீதியான மேம்பாடுகளையும் வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது. (33)

# நிலையான கருத்துக்களைக் கூறமுடியாமல் சந்திரிகா அரசு தடுமாறுகிறதென்கிறார் பீரிஸ்

ஜே.வி.பி.க்கு விட்டுக்கொடுத்து செயற்பட்டுவருவதன் காரணமாகவே, சமாதான முயற்சிகள் குறித்து நிலையான கருத்துக்களை கூறமுடியாமல், அரசாங்கம் தடுமாறி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாட்டின்போதே கட்சியின் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார். சமாதானம் தொடர்பாக அரசாங்கத்துக்கு நிலையான கொள்கைகளோ, பிடிப்போ இல்லையெனவும், இதன் காரணமாகவே அது முன்னுக்குப்பின் முரணாக செயற்பட்டுவருவதாகவும் அவர் தெரிவித்தார். சமாதான முன்னெடுப்புக்கள் ஐக்கிய தேசியக்கட்சியால் முன்னெடுக்கப்பட்டபோது அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் அது தொடர்பாக போதிய விளக்கமளிக்கப்பட்டது. ஆனால் தற்போதைய அரசாங்கம் எவருக்கும் எதுவும் தெரிவிக்காமல் நாளுக்கு நாள் முரண்பட்ட கருத்துக்களைக் கூறிவருவதாகவும் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், குற்றஞ்சாட்டியுள்ளார்.

# அமெரிக்கா செல்லும் சம்பந்தன் அரசியல் நிலை குறித்து விளக்குவார்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத் தலைவருமான இரா. சம்பந்தன் எதிர்வரும் 19ஆம் திகதி அமெரிக்காவிற்கு விஜயம் செய்கின்றார்.

அமெரிக்காவிலுள்ள தமிழ்ச் சங்கம் மற்றும் பல தமிழ் அமைப்புக்களின் அழைப்பை ஏற்று அங்கு விஜயம் செய்யும் சம்பந்தன், அங்கு நடைபெறவுள்ள கருத்தரங்குகள், கலந்துரையாடல்களில் நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள் பற்றி கருத்துரை வழங்கவுள்ளார். அதேவேளை சமாதானப் பேச்சுவார்த்தை தாமதமடைந்து வருவது குறித்தும், இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஏற்படுத்த வேண்டிய அவசியம் பற்றியும் அமெரிக்க அரசாங்கத்தின் சிரேட்ட அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறுவார். அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பும்போது லண்டனுக்கும் அவர் விஜயம் செய்யவுள்ளார். சமாதான முன்னெடுப்புக்கள் பற்றி லண்டனிலுள்ள பொது அமைப்புக்களுடன் கலந்து கலந்துரையாடுவார்.

# கட்டட நிர்மாணப் பணிகளின் தாமதங்களைத் தவிர்க்க அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

வடக்குகிழக்கின் மீள் கட்டுமானப் பணிகளில் சிறிலங்கா அரசு அக்கறை கொண்டுள்ளதாக வெளியில கூறிககொண்டாலும் அதன் செயற்பாடுகள் அவற்றை ஸ்தம்பிக்கச் செய்வது போன்றும், தடைகளை ஏற்படுத்துவது போன்றுமே அமைக்கின்றது.

வடக்குக் கிழக்கில் வன்னிப்பகுதியில் மீள்கட்டுமான நடவடிக்கைகளில் குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தை எடுத்து நோக்குவோமாயின், அரசின் திட்டமிட்ட செயற்பாடுகள் மீள் கட்டுமானச் செயற்பாடுகளுக்கு இடையூறாக அமைகின்றன.

சர்வதேச சமூகத்தினர் வழங்கும் அற்ப சொற்ப உதவிகள் கூட சரியான முறையில் மீள்கட்டுமானத்திற்குள் உள்வாங்க முடியாதவாறு தடைகளை ஏற்படுத்துவதோடு கட்டுமான வேலைகள் திட்டமிட்ட காலத்திற்குள் முடிவுறுத்தப்படாது பின்னடைவைச் சந்திப்பதற்குக் காரணமாயுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாண அதிகாரிகள் கூட ஏனைய மாவட்டங்களிலும் காட்டும் அக்கறைகளையும், ஈடுபாட்டையும் இங்கு காட்டுவதாகத் தெரியவில்லை.


குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டுமானப் பணிகள் ஏன் காலதாமதமாகின்றது? என ஆராய்ந்தபோது கிடைத்த தகவல்கள் மிக வேதனை அளிப்பதாகவுள்ளது.

தற்போது கிளிநொச்சி மாவட்டத்தில் கட்டட நிர்மாண வேலைகள் கடந்த காலங்களை விட அதிகரித்துள்ளது. கிளிநொச்சி மாவட்ட கட்டடத் திணைக்கள மேற்பார்வையின் கீழ் 33 வேலைகளில் ஒன்று முடிவடைந்து விட்டது. ஏனையவை நடைபெற்றுவருகிறது. இவற்றில் பல வேலைகள் உரிய காலத்தில் முடிக்கப்படாமலுள்ளது. இந்த வேலைகள் அனைத்தையும் உரியமுறையில் மேற்பார்வை செய்து அவற்றைத் தக்கமுறையில் நெறிப்படுத்தக் கூடிய ஆளணி மாவட்ட கட்டடத்திணைக்களத்தில் இல்லை. 1990 ஆம் ஆண்டு ஆளணித்திரட்டின் படி அலுவலகத்தில் 18 பணியாளர்கள் இருக்க வேண்டும். தற்போதைய நிலையில் இத் தொகை மேலும் அதிகரிக்க வேண்டியிருந்தும் எடடுப்பணியாளர்களே பணியாற்றுகின்றனர். இதில் எழுதுவினைஞர் எவருமில்லை.கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக எழுதுவினைஞர் எவருமின்றி இயங்கி வரும் ஒரே அலுவலகம் இந்த அலுவலமாகத்தான் இருக்க முடியும். நிமித்த அடிப்படையில் சிலர் நியமிக்கப்பட்டாலும் அவர்களுக்கு நிரந்தர நியமனம் கிடைக்காததால் அவர்களும் இவர்களிடமிருந்து பெற்ற பட்டறிவுடன் வேறு வேலைகளுக்குச் சென்று விடுகின்றனர்.

தொழில்நுட்பவியலாளர் வகுப்பு ஒன்றிலும், வகுப்பு இரண்டு ஏ யிலும் எவரும் இல்லை. வகுப்பு இரண்டு பி யிலேயே நான்கு பணியாளர்கள் இருக்கின்றனர். இவர்களும் சேவையில் உறுதிப்படுத்தப்படாதவர்கள் . அனுபவம் குறைந்தவர்கள். இவர்கள் நால்வரும் 32 வேலைகளைப் பார்க்க வேண்டி இருக்கிறது. ஒருவர் எட்டுவேலைகளைப் பார்க்கவேண்டி இருக்கிறது. வேலைத் தளங்கள் வேரவில்,முழங்காவில், பளை, கண்டாவளை, கிளிநொச்சி எனப் பல இடங்களிலுமுள்ளது. இவர்களால் ஒரே நேரத்தில் எல்லா வேலைகளையும் கவனிக்க முடியாது. வேரவில், முழங்காவிலுக்குச் செல்வோர் மூன்றாம் நாளே திரும்பிவர முடிகிறது. அந்த இரண்டு நாட்களும் இவரால் ஏனைய வேலைகளைக் கவனிக்க முடிவதில்லை.

கிளிநொச்சி நகரப்பகுதி வேலைகளைக் கவனிக்கும் நாட்களில் தூர இடங்களில் நடைபெறும் வேலைகளைக் கவனிக்க முடிவதில்லை. அது மட்டுமல்ல இந்தத் தொழிலநுட்பவியலாளர்களே அலுவலக எழுதுவினைஞர் வேலைகளையும், கணினி இயக்குனராகவும் மதிப்பீடுகளை தயாரிப்பதிலும் ஒப்பந்தக்காரரின் சிட்டைகள் சரிபார்க்கும் பணியையும் செய்ய வேண்டியுள்ளது.

ஆனால் இவர்களுக்குரிய பணி தள மேற்பார்வை மட்டுமே. ஆனால் இந்தப் பணியாளர் தமது இயலுமைக்கு மிஞ்சிய பொறுப்புக்களை ஏற்று அர்ப்பணிப்புடன் பணியாற்றுகின்றனர். இவர்கள் திணைக்கள வேலைகளை இரவிலும் விடுமுறை தினங்களிலும் மேலதிக வேலைகளைச் செய்துவருகின்றனர். இந்த நிலையிலும் கூட இந்தப்பணியாளர் கொடுப்பனவில் புறக்கணிக்கப்படுகின்றனர். இது மிக வேதனையளிக்கும் விடயமாகவுள்ளது. ஏனைய மாவட்டங்களில் நிக்கொட், நீரப், யுனிசெவ், பிளெஸ்டிஜி போன்ற வேலைகளுக்கான போக்குவரத்துச் செலவீனங்கள் தனித்தனியாக அந்தந்த திட்டங்களுக்குக் கீழ் வழங்கப்படுகின்றன. ஆனால் இந்த அலுவலர்களுக்கு இவை அனைத்துக்குமான போக்குவரத்துச் செலவீனங்கள் ஒருமுகப்படுத்தப்பட்டு மாதத்துக்கு நான்கு நாட்கள் அல்லது ஐந்து நாட்கள் என வரையறுக்கப்பட்டு வழங்கப்படுவதனால் குறைந்த ஆளணியுடன் அதிகமான வேலைகளைக் கவனிக்கும் இவ் அலுவலர்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். மேலும் "நீரப்" திட்டத்துக்கென வழங்கப்படுகின்ற மேலதிகக்கொடுப்பனவு கூட இவர்களுக்கு வழங்கப்படவில்லை. 'நிக்கொட்' திட்டத்துக்கும் அவ்வாறு வழங்கப்படுமெனப் பல தடவைகள் வாக்குறுதி அளிக்கப்பட்டும் இதுவரை வழங்கப்படவில்லை. அதனால் கிளிநொச்சி மாவட்டப்பணியாளர் கூடுதலாக வேலை வாங்கப்படும் அதேவேளை கொடுப்பனவில் புறக்கணிக்கப்படுகின்றனர். திணைக்களத்தால் மோட்டார் சைக்கிள் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அதனை உத்தியோகபூர்வமாகப் பாவிக்க இதுவரைஅனுமதி வழங்கப்படவில்லை. பிக்கப் வாகனம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கு நிரந்தர சாரதி நியமிக்கப்படவில்லை. இவை எல்லாவற்றையும் நிவர்த்திக்க மேலதிக ஆளணியைத் தராவிட்டலும் இக் காரியாலயத்தில் வெற்றிடமாகவுள்ள பதவிநிலைகளுக்கு. ஆளணியைப் பெற்றுத் தருமாறு அனைத்துத் தரப்பினரிடமும் எழுத்து மூலமும் நேரிலும் பல தடவைகள் கோரியிருந்தும் எவ்வித பயனும் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. மாறாக மாகாண மட்டத்தில் கட்டடத் திணைக்களத்தில் வெற்றிடங்கள் எவையும் இல்லை அனைத்தும் நிரப்பட்டு விட்டது என்று கூறப்பட்டதாகத் தெரிகிறது. அப்படியானால் இவர்களுக்குரிய ஆளணியை விடுவித்துத் தருமாறு கேட்டதற்கு வவுனியா, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற இடங்களில் மேலதிகமாக இருக்கின்றனர். ஆனால் அவர்களுக்கு மாற்றம் கொடுத்தால் அது அரசியல் தலையீட்டின் காரணமாக நிறுத்தப்படுகிறது எனக் கூறப்பட்டதாகத் தெரிகிறது.


(படம்: சசி)

இந்த நிலை அழிந்து போன இந்த மாவட்டத்தின் மீள்கட்டுமான மற்றும் அபிவிருத்திப் பணிகளில் கண்டிப்பாக பின்னடைவை ஏற்படுத்தி நிற்கிறது. இதையாரும் மறுக்கமுடியாது. இதில் அக்கறையுள்ள அனைவரும் இந்தத் தடைகளை அகற்ற முன்வரவேண்டும்.

கட்டுமான வேலைகளின் தாமதம் குறித்து ஒப்பந்தக்காரர் ஒருவரிடம் கேட்ட போது வேலைகள் தாமதமாவதற்கு பல்வேறு காரணங்களை கூறமுடியும் என்றாலும் முக்கியமானது திணைக்களங்களின் தாமதமான நடவடிக்கையே அதாவது முடிவடைந்த வேலைகளுக்குரிய சிட்டைகள் காரியாலயத்தில் சமர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் கொடுப்பனவு செய்யப்படும் என எமக்கு கூறப்பட்டது ஆனால் தாம் தற்பொழுது கையளிக்கும் சிட்டைகளுக்குரிய கொடுப்பனவுகள் கிடைக்கப்பெற ஒன்றரை மாதங்கள் ஆகின்றன. கேட்டால் ஆளணித் தட்டுப்பாடும், அளவுக்கதிகமான வேலைப்பளுவும் காரணமாகவே தாமத மேற்படுவதாகக் கூறப்படுகின்றது.

கொடுப்பனவுத் தாமதத்தால் வங்கிக்கு கூடுதலான வட்டியை நாம் செலுத்த வேண்டியவர்களாகின்றோம். அத்துடன் வேலையும் தாமதமாக வேண்டியநிலை ஏற்பட்டுவிடுகிறது.

ஏனென்றால் ஒரு வேலைக்கான ஒப்பந்தம் கைச்சாத்தாகும் போது இந்தவேலையின் மொத்தப் பெறுமதியின் அடிப்படையில் கட்டங்களாக பிரிக்கப்பட்டு அதற்கான ஆகக்கூடிய நிதித்தேவையை முன்னுணர்வு செய்து தீர்மானிக்கின்றோம்.

சிட்டை சமர்ப்பித்து ஒருவாரத்திற்குள் கொடுப்பனவு கிடைக்கும் என்ற அடிப்படையில் திட்டமிட்டு செய்யப்படும் போது கொடுப்பனவு எதிர்பார்த்தபடி கிடைக்கப் பெறாத விடத்து நிதிப் பிரச்சினை ஏற்பட்டு விடுகிறது வேலையும் தாமதமாக நேரிடுகிறது இதனால் பொருள்விலை அதிகரிக்கும் நிலையும் ஏற்பட்டு விடுகிறது. இதனால் மேலதிக செலவையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

சிட்டைக்குரிய கொடுப்பனவு கிடைக்கப் பெற ஒன்றரை மாதம் ஆகும் என்ற அடிப்படையில் திட்டமிடுவதாயின் மொத்த நிதித்தேவையின் அளவு அதிகரிக்கும். அதாவது மூலதனத்தின் தொகையை அதிகரிக்க வேண்டும். இதுவும் ஒருவகையில் செலவை அதிகரிப்பதாகவே அமைகிறது. அதுமட்டுமல்ல வேலைத்தளங்களில் திணைக்கள மேற்பார்வையாளர் தேவைப்படும் நேரங்களில் இல்லாதிருப்பதால் நாம் வேலையை வேகமாக செய்யமுடியாதுள்ளது. மேற்பார்வையாளர் வரும்வரை பணியாளர் காத்து நிற்க வேண்டிய நிலை கூட பல தடவைகள் ஏற்பட்டதுண்டு.

அதுமட்டுமல்ல மூலப்பொருட்கள், வேலையாட்களை உரியநேரத்தில் பெற்றுக் கொள்வதில் நெருக்கடிகள் இருக்கின்றன. இவையும் வேலைகள் தாமதமாகக் காரணமாக அமைந்து விடுகின்றன என்றார்.

ஒப்பந்தகாரர் திணைக்களத்தினர், நிதி அளிக்கும் அமைப்பு இவை மூன்று தரப்புகளும் இணைந்து நிர்மாணப்பணிகளை மேற்கொள்ளும் போதே தாமதத்தைத் தவிர்க்க முடியும். இதில் ஏதாவது ஒரு தரப்பினரின் நடவடிக்கையில் தாமதம் ஏற்பட்டால்கூடமுடிவுறும் வேலையில் தாமதம் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த வகையில் தற்போது கிளிநொச்சி கட்டடத் திணைக்களத்திலுள்ள ஆளணி வெற்றிடங்களை நிரப்பச் சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்கத்தவறின் கிளிநொச்சி மாவட்டத்தின் கட்டட நிர்மாணப்பணியில் தவிர்க்க முடியாத தாமதங்களும் இடையூறுகளும் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.

தனோஜிகா

## -2003-க.பொ.த(சா/த) பரீட்சையில்-
# மோசடியிலீடுபட்ட 500 பரீட்சார்த்திகளின் தவறுகள் வகைப்படுத்தப்பட்டு பரிசீலனை

(கொழும்பு)

இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத்தராதர சாதாரணப் பரீட்சையில் 500 பரீட்சார்த்திகள் மோசடியில் ஈடுபட்டதாகக் கூறி அவர்களின் பெறுபேறுகளைப் பரீட்சைத் திணைக்களம் இடைநிறுத்தி வைத்துள்ளது. மேற்படி பரீட்சார்த்திகளின் தவறுகள் வகைப்படுத்தப்பட்டு, அந்தந்த கல்விப் பிரதேசங்களின் படி பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும், அது முடிவடைந்தும் உரிய பரீட்சார்த்திகளுக்கு தபால்மூலம் அனுப்பிவைக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்முனைப் பிரதேசத்திலுள்ள பரீட்சை நிலையத்திலேயே பெருமளவு மோசடிகள் இடம் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படடுள்ளது.

இதேவேளை மேற்படி பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகி சித்தியெய்திய மாணவர்களுக்கு உயர்தரக் கற்கை நெறிகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அவதானித்தால் தொடர்பு கொள்க!

மக்கள் வாழ்விடங்களிலும், பொது இடங்களிலும் பார்த்தீனியச்செடிகள் காணப்பட்டால் அவை தொடர்பான விபரங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பிரதேசங்களுடன் தொடர்பு கொண்டு தெரியப்படுத்துமாறு பொதுமக்களை கிளிநொச்சி மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். சூழல் பாதுகாப்பு மாதத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் பார்த்தீனியம் செடி அழிப்பு நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டு வருகிறது. கிளிநொச்சி நகரை அண்டிய பகுதிகளான வீதி அபிவிருத்திச் அதிகார சபை நிறை வேற்றுப் பொறியியலாளர் பணிமனை வளாகத்தில் சுமார் அரை ஏக்கர் விஸ்தீரணத்தில் காணப் பட்ட செடிகளையும், இலங்கை பெந்த கொஸ்தே சபை வளாகத்தில் சுமார்அரை ஏக்கர் விஸ்தீரணத்தில் காணப்பட்ட செடிகளையும் கடந்த 15 ஆம் திகதி முழுமையாகக் களைநாசினி மூலம் கிளிநொச்சி மாவட்டத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் அழித்துள்ளனர்.

# சில்வாக்களை முறியடித்துவரும் பண்டாரநாயக்காக்கள்


சில்வாக்களுடன் இணைந்து அரசியல் நடத்துவது பண்டாரநாயக்கா குடும்பத்திற்குப் புதிதல்ல. 1956ஆம் ஆண்டு எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா விலியம்சில்வா, பிலிப்குணவர்த்தனாவுடன் இணைந்து ஆட்சி நடத்தினார். 1970ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்கா அம்மையாரும், கொல்வின் ஆர்.டி.சில்வா, என்.எம்.பெரேராவுடன் இணைந்து ஆட்சி அமைத்தனர். சில்வாவுடன் இணைந்து ஆட்சி நடத்துவது இலகுவானதல்ல, கடுமையானதென்பது பண்டாரநாயக்கா குடும்பத்தினருக்கு நன்கு தெரிந்த விடயமாகும். பிலிப்குணவர்த்தனா விலியம் சில்வாவுடன் பண்டா மோதுவது மிக கடினம் என எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் பண்டாரநாயக்கா 1956ஆம் ஆண்டு சுடப்பட்டு இறக்கும்பொழுது பிலிப்பையும், விலியம் சில்வாவையும் குப்பைத் தொட்டியில் தள்ளிவிட்டார்.

1970ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்கா கொல்வின் ஆர்.டி.சில்வா என்.எம்.பெரேராவுடன் இணைந்து ஆட்சிபீடம் ஏறினார். இவர்களுடன் மோதுவது மிகவும் அமைச்சர் பதவியை நிராகரித்தார். பின் பண்டாரநாயக்கா பிலிப்குணவர்த்தனாவின் பெயரை அமைச்சரவைப் பட்டியலிலிருந்து நீக்கிவிட்டார். பின் பண்டாரநாயக்கா ஆளுநர் முன்னிலையில் அமைச்சர்களுடன் சத்தியப் பிரமாணம் செய்வதற்கு புறப்படும் வேளையில் பிலிப்குணவர்த்தனா தனக்கும் அமைச்சர் பதவி தேவை எனவும் நிதி அமைச்சா பதவியை தமக்கு தரும்படியும் பண்டாரநாயக்காவைக் கேட்டுக்கொண்டார். இதைக் கேட்ட பண்டாரநாயக்கா கடும் அதிர்ச்சி அடைந்தார். முன்னர் அமைச்சர் பதவி தனக்கு வேண்டாம் எனக் கூறிவிட்டு தற்பொழுது அமைச்சர் பதவி வேண்டும் எனக் கூறுவதன் காரணம் யாது என பண்டாரநாயக்கா பிலிப்குணவர்த்தனாவிடம் வினவினார்.

நான் எல்லாத்தீர்மானங்களையும் எடுத்து விட்டேன். அமைச்சுப்பதவி வெற்றிடங்கள் கிடையாது என பண்டாரநாயக்கா கூறி விட்டார். தனது கட்சிக்கு பாராளுமன்றத்தில், ஐந்து ஆசனங்கள் மட்டுமே உள்ள ஒரு நிலையில் அமைச்சர் பதவி மட்டுமே தமது கட்சிக்குக் கிடைக்கும். ஆகவே விலியம் சில்வாவுக்கு முதலில் அமைச்சர் பதவி



சிறிமாவோ



கொல்வின்

கொல்வின் ஆர்.டி.சில்வா, கலாநிதி என்.எம். பெரேரா ஆகியோருடன் இணைந்து வெற்றி பெற்று ஆட்சிபீடம் ஏறினார். ஐக்கிய தேசியக் கட்சியைக்குழி தோண்றிப்புதைத்து விட்டோம். மீண்டும் அந்தக்குழியிலிருந்து வெளியேறுவது மிகக்கடினம் என்று கூறினார்கள். ஆனால் ஆட்சியமைத்து அமைச்சுப் பதவிகள் வழங்கும் பொழுது சிறிமாவோ அம்மையார் மிக அவதானமாக செயற் பட்டார். அப்பொழுது கொல்வின் ஆர்.டி. சில்வாவும், கலாநிதி என்.எம்.பெரேராவும் தாங்கள் கேட்கும் அமைச்சுப் பதவிகள் சிறிமாவோ வழங்காவிட்டால் அமைச்சுப் பதவிகளை ஏற்காமல் கட்சியினுள் அரசுக்கு நெருக்கடி கொடுப்பதற்கு தீர்மானங்களை எடுத்தனர்.

இதனால் மறுபடியும் கட்சியின் பலவீனங்களைப் புரிந்துகொண்டு ஐக்கிய தேசியக்கட்சி மீண்டும் நாட்டில் தலைதூக்கத் தொடங்கிவிடும் என நினைத்து கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா பெருந்தோட்டத் துறை அமைச்சுப் பதவியையும், கலாநிதி என்.எம்.பெரேரா நிதி அமைச்சுப்பதவியையும் ஏற்றுக்கொண்டனர். பதவிகளை ஏற்றாலும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அரசுக்கு கட்சிக்குள் இருந்துகொண்டு பெரும் நெருக்கடிகளைக்கொடுத்த வண்ணம் இருந்தார்கள். ஐக்கிய தேசியக்கட்சியின் நாமத்தைக்கூறி சிறிமா அம்மையாரைப் பயமுறித்தி சிறிலங்கா சுதந்திரக்கட்சியை பலவீனப்படுத்தி லங்கா சமசமாஜக் கட்சி வலையில் சிக்க வைத்தமையால் சிறிமாவுக்கு அதிலிருந்து மீளமுடியாமல் போயிற்று. அப்பொழுது ஐக்கிய தேசியக்கட்சி அரசுக்கு எதிராக எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையில் ஆரம்பித்தன. இதைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திய லங்கா சமசமாஜக் கட்சி தலைவர்களான கொல்வின் ஆர்.டி.சில்வாவும், கலாநிதி என்.எம்.பெரேராவும் அரசாங்கத்தை வீதியில் இறக்கி ஐக்கிய தேசியக்கட்சிக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் செய்தனர். இதற்கு லங்கா சமசமாஜக்கட்சி தலைமை தாங்கியது. இந்த போட்டியிட்டு ஒரு ஆசனத்தையாவது பெற்றுக கொள்ள முடியாமல் போயிற்று. இத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தோற்றுப் போனாலும் அரசியலில் இருந்து அவர்கள் அழியவில்லை. அதற்குப் பதிலாக லங்கா சமசமாஜக்கட்சி அரசியலில் இருந்து முற்றாக அழிந்தது. இதனால் கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வாவும் கலாநிதி என்.எம். பெரேராவும் அரசியலில் இருந்து தூக்கி எறியப்பட்டார்கள். இதுதான் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அரசியல் சரித்திரம். இவைகள் யாவும் சந்திரிகாவுக்கு நன்றாகத் தெரியும். சந்திரிகாவின் தந்தை எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா, விலியம் சில்வா, பிலிப்குணவர்த்தனாவுடன் அரசியல் நடத்தும்பொழுது சந்திரிகா அம்மையார் பள்ளி மாணவியாக இருந்தார். பின் கொல்வின் ஆர்.டி.சில்வா கலாநிதி என்.எம். பெரேராவுடன் அரசியல் நடத்தும் பொழுது சந்திரிகா நாட்டின் காணி மறுபரிசீலனை செய்யும் ஆணையாளர் திணைக்களத்தில் கடமைபுரிந்தார். அப்பொழுது அவர் இடதுசாரிகளான கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா கலாநிதி, என்.எம்.பெரேராவின் இடதுசாரிக்கொள்கைகளில் ஈர்க்கப்பட்டார். தனது தாயாரான சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கும் கலாநிதி என்.எம். பெரேராவுக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து மோதல்களின் பொழுது சந்திரிகா என்எம்பெரேராவுக்கு சார்பாகவே செயற்பட்டார். அப்பொழுது சிறிமாவோ அம்மையார் இடதுசாரிகளுக்கு எதிராக எடுத்த தீர்மானத்தால் சிறிலங்கா சுதந்திரக்கட்சி உயிர்தப்பியது. அதன்பிரதிபலன் 1994ஆம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமைப் பதவியை சந்திரிகா ஏற்றுநாட்டின் பொதுத் தேர்தலில் அமோக வெற்றியீட்டினார். அன்று சிறிமாவோ இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிட்டால் சந்திரிகா என்ற பெயர் இலங்கை சரித்திரத்தில் இருந்திருக்காது.

சந்திரிகாவுக்கு இவையெல்லாம் நன்றாகத் தெரியும். நடந்த சம்பவங்களை நினைவில்

கடினம் என சகலரும் எதிர்பார்த்தனர். 1977ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆட்சி தோல்விகண்ட பொழுது என்.எம்.பெரேராவையும் கொல்வின் ஆர்.டி.சில்வாவையும் குப்பைத் தொட்டியில் தள்ளிவிடுவாரா? இதைச் சரியாக சொல்லமுடியாது. பண்டாரநாயக்கா குடும்பத்தாரின் சரித்திரத்தை எடுத்துக்கொண்டால் டில்வின்சில்வாவும் சில வேளை குப்பைத் தொட்டியில் தள்ளப்படுவதற்கு இடம் உண்டு. 1956ஆம் ஆண்டு எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கா பிலிப் குணவர்த்தனா, விலியம் சில்வா ஆகியோருடன் இணைந்து ஐக்கிய தேசியகக்கட்சியை இல்லாதொழிக்கும் முயற்சியில் இறங்கினார். 1956ஆம் ஆண்டு தேர்தலில் பண்டாரநாயக்கா வென்றபொழுது ஐக்கிய தேசியக் கட்சியின் சரித்திரம் முடிந்தது. இனி நாட்டில் ஐக்கிய தேசியக்கட்சி இல்லை. அவர்களைச் சவக்கிடங்கில் தள்ளி மூடி விட்டோம் என பிலிப்குணவர்த்தனா அவர்கள் பண்டாரநாயக்காவுக்கு கூறினார்.

பண்டாரநாயக்காவையும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியையும், வண்டி இழுக்கும் எருதாகப் பாவித்து அவரின் மேல் ஏறி சவாரி செய்து சிறிலங்கா சுதந்திரக்கட்சியை இல்லாதொழித்து தனது மக்கள் ஐக்கிய முன்னணியைக் கட்டியெழுப்புவதற்கு முழுத் திட்டங்களையும் பிலிப்குணவர்த்தனா தீட்டினார். பின் பண்டாரநாயக்கா அமைச்சர்களை நியமிக்கும்பொழுது பிலிப் குணவர்த்தனாவை வரவழைத்து அமைச்சரவையில் எந்த அமைச்சுப்பதவி வேண்டும் எனக் கேட்டார். தனக்கு அமைச்சுப் பதவிகள் வேண்டாம் நான் சாதாரண பாராளுமன்ற அங்கத்தவராக மூன்றாம் வகுப்பு கலரியில் இருக்க விரும்புகிறேன். எனது கட்சி அங்கத்தவர் ஒருவருக்கு அமைச்சுப் பதவியை வழங்குக என வேண்டிக்கொண்டார். அப்படியானால் கட்சி உறுப்பினரின் பெயரை குறிப்பிடுங்கள் என்று அவரிடம் கேட்டபொழுது விலியம் சில்வாவின் பெயரை பிலிப் குணவர்த்தனா சிபார்சு செய்தார். பலதடவைகள் பண்டாரநாயக்கா கேட்டும் பிலிப் குணவர்த்தனா வழங்கியபின் பண்டாரநாயக்காவிடம் பலவந்தமாக மீண்டும் ஒரு அமைச்சர் பதவியை எடுப்பதற்காகவே பிலிப்குணவர்த்தனா இந்தத்திட்டத்தை வகுத்தார். பண்டாரநாயக்கா கடைசி நேரத்தில் செய்வதறியாமல் பிலிப்குணவர்த்தனாவுக்கு விவசாய உணவு அமைச்சர் பதவியை வழங்குவதற்கு ஒப்புக் கொண்டார். ஆனால் பிலிப்குணவர்த்தனா நிதி அமைச்சும், தொழில் அமைச்சும் வேண்டும் என உறுதியாக இருந்தார். அதற்கு பண்டாரநாயக்கா விவசாய உணவு அமைச்சுப் பதவியைத் தவிர வேறு எதுவும் வழங்க இயலாது என முடிவாகக் கூறி விட்டார். ஆகவே பிலிப்குணவர்த்தனா விவசாய உணவு அமைச்சர் பதவியை ஏற்றுக் கொண்டார்.

அவர் தனது கட்சியை வளர்ப்பதுடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சியைப் படிப்படியாக இல்லாதொழிக்கும் படலத்தை ஆரம்பித்தார். அரசாங்கக் கட்சிக்குள் தாம் ஒரு பலம் வாய்ந்த இடதுசாரி என நிரூபித்து தன்னை ஒரு பலம் வாய்ந்த அரசியல்வாதியாகக் காண்பித்து பண்டாரநாயக்காவை திறமையற்ற ஒரு தலைவராக மாற்றுவதில் ஈடுபட்டார். இதில் பண்டாரநாயக்கா அரசு சிறுபான்மை அரசாக இருந்தமையால் பிலிப் குணவர்த்தனாவின் மிரட்டல்களுக்குப் பயந்து செய்வதறியாமல் திணறியது. இதனால் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர்களைக் கட்சியில் இருந்து நீடிக்கும்படி

**உப்புல் ஜோசப் பர்னாந்து (லங்காதீப)**
**மொழியாக்கம் அ.சக்திவேல்**

பிலிப்குணவர்த்தனா பண்டாரநாயக்காவைக் கேட்டுக்கொண்டார். கட்சியின் நெருக்குதலால் கடைசியில் பிலிப்குணவர்த்தனா கட்சியிலிருந்து தூக்கி எறியப்பட்டார். இதனால் பிலிப்குணவர்த்தனாவின் திட்டங்கள் யாவும் தவிடுபொடியாகியதுடன் பிலிப் குணவர்த்தனாவும் விலியம் சில்வா வும் அரசியல் அநாதைகளானார்கள். இதனால பிலிப்பின் கனவுகள் யாவும் நிர்மூலமாகின.

1970ஆம் ஆண்டு சிறிமா அம்மையார்



சந்திரிகா



டில்வின்சில்வா

ஆர்ப்பாட்டங்களில் லங்கா சமசமாஜக்கட்சி கையாண்ட ராஜதந்திரங்களும் எதிர்ப்பு சுலோகங்களும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு மிகவும் சந்தேகங்களையே உண்டுபண்ணியது. இவர்கள் ஐக்கிய தேசியக்கட்சிக்கு எதிராக மேற்கொள்ளும் ஆர்ப்பாட்டம் சுதந்திரக்கட்சியை மிகப் பலவீனப்படுத்தியது. இதை உணர்ந்துகொண்ட சிறிமாவோ அம்மையார் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதை நிறுத்திக் கொண்டார். இதனால் அரசாங்கத்தினுள் லங்கா சமசமாஜக் கட்சியைப் புறந்தள்ளி அக்கட்சிக்கு எதிராக சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் செயற்படத் தொடங்கினர்.

இதைஉணர்ந்துகொண்ட லங்கா சமசமாஜக் கட்சியினர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சில பாராளுமன்ற அங்கத்தவர்களைத் தமது பக்கம் இழுப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டனர். இதனால் வெறுப்படைந்த சிறிமாவோ அம்மையார் கலாநிதி என்.எம்.பெரேராவை நிதியமைச்சர் பதவியிலிருந்து நீக்கினார். இதனால் லங்கா சமசமாஜக் கட்சி அரசாங்கத்திலிருந்து விலகிச்சென்றது. இவர்கள் கட்சியிலிருந்து விலகியமையால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சரித்திரம் முடிந்துவிட்தென நினைத்தார்கள். 1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் லங்கா சமசமாஜக்கட்சி தனித்து

வைத்துக்கொண்ட டில்வின் சில்வாவுடன் மிக அவதானமாகவும் நிதானமாகவும் கட்சியின் உறவுகளை வைத்துள்ளார். கடந்த வாரம் டில்வின் சில்வாவிடம் இருந்து சனாதிபதிக்கு நான்கு பக்கங்கள் அடங்கிய கடிதம் கிடைத்தபின் சந்திரிகா டில்வினை வரவழைத்து தமது சிரிப்பால் அந்தப்பிரச்சினையை அப்படியே மூடி மறைத்துவிட்டார்.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா தொடக்கம் சிறிமாவோ பண்டாரநாயக்கா வரை சில்வா என்ற பெயர்களுக்கு பயந்து மயங்கி அரசியல் நடத்திக் கடைசியில் சில்வா என்ற பெயர்களையும் அவர்களது கட்சிகளையும் பண்டாரநாயக்காக்கள் நாட்டில் இல்லாதொழித்துவிட்ட சரித்திரத்தை இலங்கை மக்கள் மறக்கவில்லை. 1956இல் விலியம் சில்வாவும், 1970இல் கலாநிதி கொல்வின் ஆர்.டிசில்வாவும் இணைந்துள்ளனர். கொல்வின ஆர்.டி.சில்வா தங்கமூளை உடையவர் என இலங்கையில் வர்ணிக்கப்பட்டவர். அப்படிப்பட்ட மூளை உடையவர்களால் கூடப்பண்டாரநாயக்காக்களை அரசியலிலிருந்து அழிக்க முடியாமல் போயிற்று. ஆகவே இந்த டில்வின் சில்வாவை சந்திரிகா தூக்கிஎறியும் காலம வெகுவிரைவில் உதயமாகும். லங்கா சமசமாஜக் கட்சியினருக்கும், கம்யூனிஸ்ட் கட்சியினருக்கும் நடந்த கதி ஜே.வி.பி.யினருக்கும் கட்டாயமாக நடக்கும்.

# கால்வாய் நோயைக்கட்டுப்படுத்த தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை

கால்வாய் நோய் கட்டுப்பாடு சம்பந்தமான கலந்துரையாடல் த.பொ.மே.நிறுவன நடுவப்பணியகத்தில் நேற்று முன்தினம் நிறுவனப்பொறுப்பாளர் சி.கரிகாலன் தலைமையில் நடைபெற்றது.

ஆடுமாடுகளை தாக்கி அழிக்கின்ற மேற்படி வைரஸ் நோயை தடுக்க வருமுன்காக்கும் நடவடிக்கையினை மேற்கொள்ளும் நோக்கில் கனகராயன்குளம், ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு,கிளிநொச்சி பூநகரி ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய கால் நடை வைத்தியர்கள் கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர்கள் கலந்து கொண்டனர்தங்கள்,தங்கள் பிரதேசங்களில் உள்ள மாடுகளுக்கு இன் நோய் பரவாமல் இருப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், தற்போது மல்லாவிப் பிரதேசத்தில் இந்நோய் இனங்காணப்படாமையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் ஏனைய பிரதேசங்களில் இந்நோய் பரவாமல் இருப்பதற்கு நோய்க் கெதிரான தடுப்பூசி மருந்தை கால்நடை வளர்ப்போர்கள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களில் இருந்து உடனடியாகப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும், எதிர்வரும் வெள்ளிக்கிழமை தொடக்கம் கிளிநொச்சி மாவட்டத்திலும் இதனைத் தொடர்ந்து ஏனைய மாவட்டங்களிலும் தடுப்பூசி ஏற்றும்நடவடிக்கை மேற்கொளவதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கால்நடைவளர்ப்போர் பூரண ஒத்துழைப்பு கொடுத்து, மேற்கொள்ளப்படும் இலவசமான இந் நடவடிக்கையினைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுடன் இந் நோய்க்கான அறிகுறி காணப்படும் பட்சத்தில் இறைச்சித் தேவைக்கோ அல்லது வேறு பிரதேசங்களுக்கு கொண்டு செல்வதைத் தடுத்து உடனடியாக த.பொ.மே. நிறுவனத்தினரிடமோ அல்லது கால் நடை வைத்தியர்களிடமோ தொடர்பு கொண்டு உங்கள் கால்நடைகளை பாதுகாத்துக் கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுக் கொண்டுள்ளது.



தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நோர்வே கிளையினரால் நடத்தப்பட்ட 'புலர்வின் பூபாளம்' நிகழ்வில் ஒரு காட்சி. கடந்த 22 ஆம் திகதி இந் நிகழ்வு நடைபெற்றது.

## அன்னை சாரதாதேவி ஜெயந்தி

அருள்மிகு அன்னை ஸ்ரீசாரதா தேவியின் 150 ஆவது ஆண்டு ஜெய்ந்தி நிகழ்வு நாளை திருகோணமலையில் ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரியின் இந்து மன்றத்தினால் கொண்டாடப்படவுள்ளது. அன்றைய தினம் காலை 7 மணியளவில் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட அன்னையின் திருவுருவச்சிலை நகர்வலமாக எடுத்துவரப்படவுள்ளது. (25)

# திருகோணமலையில் பௌத்தர்களின் புனித நகர்

# சனாதிபதியின் பிரகடனத்திற்கு கடும் எதிர்ப்பு!

## உடன் கைவிட நிர்ப்பந்தம் வலுவடைகிறது

(திருமலை)

**திருகோணமலை மாவட்டத்தின் ஒருபகுதி பௌத்தர்களின் புனித நகராக சிறிலங்கா சனாதிபதியினால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளமைக்கு தமிழ் மக்கள் தரப்பிலிருந்து கடும் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுவருகிறது. அத்துடன்இந்த அறிவிப்பை உடனடியாகக் கைவிடுமாறும் நிர்ப்பந்தங்கள் எழத் தொடங்கியுள்ளன.**

திருகோணமலை மாவட்டத்தில் புனித நகர்ப் பிரகடனம் தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பு தமிழ் மக்களுக்கு எதிரான அப்பட்டமான இனவாதத்தின் வெளிப்பாடாகும்.

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அண்மையில் வெளியிட்ட வர்த்தமானி அறிவிப்பு மூலம் திருகோணமலை மாவட்டத்தில் சேருவில பிரதேசத்தின் ஒரு பகுதியும் திரியாய்க்கிராமத்தின் ஒரு பகுதியும் பௌத்தர்களின் புனித இடங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசமாக இருந்த கொட்டியாபுரப்பற்றில் தமிழ் மக்களைப் பலாத்காரமாக வெளியேற்ற வைத்து திட்டமிட்டு உருவாக்கப்பட்ட சேருவில பிரதேசத்தின் ஒரு பகுதியையும் பூர்வீக தமிழ்க்கிராமமான திரியாயின் ஒரு பகுதியையும் புனித இடங்களாகப் பிரகடனப் படுத்தி அப்பிரதேசங்களில் எவ்விதமான கட்டடவேலைகளும் புனரமைப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படக்கூடாது எனவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் புனிதநகராகப் பிரகடனப்படுத்தப்பட வேண்டியதும், பாதுகாக்கப்பட வேண்டியதும் திருக்கோணேஸ்வர ஆலயமும் அதனைச்சூழவுள்ள கோட்டைப்பிரதேசமும் ஆகும். இதனைப் புனித நகராகப் பிரகடனப் படுத்த வேண்டும். என்று பல வருடங்களாகக் கோரிக்கை விடப்பட்டும் அதுகுறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் பேரினவாத ஆட்சியாளர்கள் புனித பிரதேசத்தைச் சீர்குலைத்துப்பௌத்தப்பேரினவாத சூழலொன்றைக் கட்டியெழுப்புவதற்கு அப்பட்டமாகப் பல்வேறு முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றமை தமிழ் மக்கள் மத்தியில் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. "கோயிலும், சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை" பிரதேசம் இன்று கருவாடும் மீனும் குவித்து வைக்கப்பட்டு வியாபாரம் செய்யும் இடமாக மாற்றப்பட்டுள்ளது.

பாபநாச தீர்த்தம் இன்று இராணுவ அணிவகுப்பு இடம்பெறும் இடமாக மாற்றப்பட்டுள்ளது. திருமலையிலுள்ள இந்து ஆலயங்களின் தீர்த்தக்கடற்கரை இன்று "சமுத்திரகம" ஆகப் பெரும்பான்மையின் குடியேற்றத்தினால் நிரம்பி வழிகின்றது. என்பது குறிப்பிடத்தக்கது. (25)

# கண்ணிவெடி அகற்ற ஜப்பான் நவீன இயந்திரம் வழங்கும்

(அலுவலக செய்தியாளர்)

கண்ணிவெடிகள் அகற்றும் நவீன இயந்திரம் ஜப்பான் கண்ணிவெடி அகற்றும் நிறுவனம் ஒன்றினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் கண்ணிவெடிகளை அகற்றும் மனித நேயக் கண்ணிவெடிகள் அகற்றும் பிரிவிற்கு வழங்கப்பெறவுள்ளது.

இவ் இயந்திரம் கிடைத்த தன் பிற்பாடு எத்தகைய ஆபத்துக்களும் இன்றி விரைவாக மிதிவெடிகளை அகற்றி பாதுகாப்பாக மக்கள் மீள் குடியமர தம்மால் ஒத்துழைக்கக் கூடியதாக இருக்கும் என மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் தெரிவித்தனர்.

மக்கள் வாழ்விடங்கள், வயல் நிலங்கள் எனப் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலப்பரப்பு மிதிவெடி வயல்களாக சிறிலங்காப் படையினரால் மாற்றப்பட்டுள்ளன. இதன் காரணமாக மக்கள் சமாதானக் காலத்திற் கூட தத்தம் சொந்த இடங்களிற்குச் சென்று மீள் குடியமரவோ.வேளாண்மை செய்யவோ முடியாது இன்னமும் அகதி முகாம்களில் கிடந்து அல்லற்படுவதாகவும் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் தெரிவிக்கின்றனர். (சோ)

## மருதங்கேணிப் பகுதியில் 960 வெடிபொருட்கள் மீட்பு

(வடமராட்சி கிழக்கு)

மருதங்கேணிப் பகுதியில் மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் பெண்கள் அணியினரால் 903 மிதி வெடிகளும், 57 எறிகணைகளும், மீட்கப்பட்டுள்ளன.

இந்தமிதிவெடிகள், எறிகணைகள் என்பன மருதங்கேணி புதுக்காட்டு வீதியில் மாசார் சந்தியில் இருந்து கல்லடி வைரவர் கோவில்வரையான இராணுவம் நிலை கொண்டிருந்த பகுதியில் இருந்தே மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை மனிதநேயக்கண்ணி வெடி அகற்றும் பணிகள் அப் பகுதியில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்தனர். (11)

# பூர்வீக தமிழர் பிரதேசத்தைக் காப்பாற்றும் பாலம்போட்டாறு வீடமைப்புத் திட்டம்

(அலுவலக செய்தியாளர்)

திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் பிரதேசத்தில் பாலம் போட்டாறு கிராமத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் லண்டன் கனக துர்க்கைஅம்மன் ஆலய நிதியுதவியுடன் 10 வீடுகள் அமைக்கும் திட்டத்தை முதற் கட்டமாக நடைமுறைப்படுத்தியுள்ளது.

திருமலை கண்டி வீதியில் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களில் திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்களால் பாரம்பரிய தமிழ் நிலங்கள் பறிபோய்க் கொண்டிருக்கின்றன.

திருமலை கண்டிவீதியில் ஒரு சில கிலோமீற்றர் தூரத்தில் கூட தமிழர்கள் நிம்மதியாக ,சுதந்திரமாக வாழமுடியாதவாறு விரட்டப்பட்டுள்ளார்கள். இதற்கு மாறாக தமிழ் மக்களின் சொந்த நிலங்களில் சிங்களவர் குடியேறி வருகின்றார்கள். இந்நில அபகரிப்பை தடுத்து நிறுத்துவதாயின் தமிழ் மக்களைச் சொந்த இடங்களில் மீளக் குடியமர உரிய நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்ள வேண்டிய தன் தார்மீகப்பொறுப்பை உணர்ந்து கொண்ட புலம் பெயர்ந்து வாழும் எமது உறவுகள் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு உதவ முன் வந்துள்ளனர்.



பாலம்போட்டாறு பத்தினி அம்மன் ஆலயச் சூழலில் திருமலை - கண்டி வீதியில் அமைக்கப்பெற்று வரும் 10 வீடுகளும் இரண்டொரு மாதங்களில் மக்களிடம் கையளிக்கப்பெறும்.

ஒருலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் ஒவ்வொரு வீடுகளும் கட்டப்பட்டு வருகின்றன. இவற்றுடன் குடிநீர் வசதி, மலசலகூட வசதி என்பனவும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளையும் திருகோணமலை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர் மேற் கொண்டு வருகின்றனர். (சோ)

# மதுபான நிலையத்தை அகற்ற மக்கள் அவசர வேண்டுகை

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி கட்சன் வீதிச் சந்திக்கு அருகில் அமைந்துள்ள மெண்டிஸ் மதுபானவிற்பனை நிலையம் வட்டக்கச்சி மகாவித்தியாலத்திற்கு அண்மையாக இருப்பதனாலும், மது போதையில் உள்ளோர் அப்பகுதியில் மேற்கொண்டு வரும் அடாவடித்தனங்களாலும் இந்த மதுபான விற்பனை நிலையத்தை அகற்றுமாறு மக்கள் வேண்டுகோள்விடுக்கின்றனர்.

மேற்படி மதுபான நிலையத்தில் மது அருந்துவோர் போதையின் உச்சக்கட்டத்தில் பாடசாலை மாணவர்கள், பெண்கள், சிறுவர்களை தகாதவார்த்தைகளால் ஏசுவதுடன், அவ்வீதியால் செல்லும் பாதசாரிகளையும் தாக்கி வருவதாகவும் மக்கள்தெரிவிக்கின்றனர். (12)

# சூழல் மாதத்தை முன்னிட்டு மரம் நடுகை நிகழ்வு

(மல்லாவி)

சூழல் 'பாதுகாப்பு மாதத்தை முன்னிட்டு மரநடுகையும் கருத்தரங்கு நிகழ்வு பாண்டியன்குளம் மகாவித்தியாலய மண்டபத்தில் நேற்று முன்தினம் காலை 10.00 மணிக்கு துணுக்காய் பிரதேச செயலாளர் உதவித்திட்டப் பணிப்பாளர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா தலைமையில் இடம் பெற்றது.

மங்கல விளக்கினை மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் சு.அ.ஜெறோம் ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியை பாண்டியன் குளம் மகாவித்தியாலய அதிபர் ஏற்றிவைத்தார்.

மரநடுகையினைத் தொடர்ந்து கருத்துரைகளைப் பாண்டியன் குளம் பிரதேசபொருண்மியஇணைப்பாளர் அமலன். துணுக்காய் விவசாய போதனாசிரியர் திருமதி. புவனேஸ்வரி சிவபாலன், சுகாதார பரிசோதகர் செ.அரவிந்தன், சூழல் சுற்றாடல் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆகியோர் வழங்கினர்.

மேற்படி நிகழ்வில் அரச, அரச சார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பொதுமக்கள் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (24)

# குஜராத் முதல்வரை கொலை செய்யும் முயற்சி மாநில பொலிசாரால் முறியடிப்பு

## நான்கு தீவிரவாதிகள் சுட்டுக்கொலை

(புதுடில்லி)

**குஜராத் முதலமைச்சர் நரேந்திரமோடியைக் கொலைசெய்யத் தீவிரவாதிகள் மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது. இதன் போது நான்கு தீவரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனா என குஜராத் மாநிலப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.**



இதனையடுத்தே குஜராத்தில் மாநில குற்றத்தடுப்பு பொலிசாருக்கும் நஸ்கரிய தொய்வாதீவிர வாதிகளுக்கும் மோதல் ஏற்பட்டதாகப் பொலிசார் கூறியுள்ளனர்.

இந்த மோதலில் பெண் தீவிர வாதி யொருவர் உட்பட 04 தீவிரவாதி களைச் சுட்டுக்கொன்றுள்ளதாகவும் மாநிலப் பொலிசார் கூறியுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை நடந்துள்ளது. குஜராத் முதலமைச்சர் நரேந்திரமோடியைக் கொல்வதற்காக இவர்கள் குஜராத் வந்துள்ளதாகத் தகவல் கிடைத்தமையினை அடுத்து தீவரவாதிகள் வந்த வாகனத்தை பொலிசார் விமான நிலையத்திற்கருகே சுற்றிவளைத்துத் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று அகமதாபாத் காவல்துறை ஆணையாளர் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார். கொல்லப்பட்ட தீவிரவாதிகள் நால்வரில் பெண் உட்பட இருவர் இந்தியாவைச் சேர்ந்தவர்கள், ஏனைய இருவர் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள், என்றும் அவர் கூறியுள்ளார்.

# பா.உ.மீதான ஊழல் குற்றச்சாட்டை விசாரிக்க தனிச்சட்டம் தேவை

## -இந்.மக்களவை சபாநாயகர் தெரிவிப்பு

(புதுடில்லி)

ஊழல் மற்றும் குற்றச்சாட்டுக்கள் கொண்ட அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதான வழக்குகளைவிரைவாக நடத்தி முடிப்பதற்கு தனிச்சட்டம் தேவையாகவுள்ளது.

இவ்வாறு மக்களவை சபாநாயகர் சோம்நாத் சட்டர்ஜி கூறியுள்ளார்.

கல்கத்தாவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இவ்வாறு தனிச் சட்டம் கொண்டு வருவதன் மூலமே இவர்கள் குற்றவாளிகளா... இல்லையா... என்பது பற்றி விரைவில் முடிவு தெரியவரும் என்று கூறியுள்ளார்.

வழக்குகள் விசாரணை செய்யப்பட்டு, அதன் மூலம் தண்டனை அளிக்கப்படாதவரை எவரையும் தமது பதவிகளை இராஜினாமா செய்யும்படி வற்புறுத்த முடியாது என்று கூறிய அவர்.

இந்திய சனாதிபதி அப்துல் கலாமின் உரையின் மீதான விவாதத்தில் எதிர்க்கட்சிகள் கலந்து கொள்ளவில்லை. இதன் மூலம் பாராளுமன்றம் சீராக இயங்குவதில்லை என்று மக்களுக்கு காட்டுவதாகவே இத்தகைய நடவடிக்கைகள் அமையும் அதனால் இவை மாற்றப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஊழல் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய அமைச்சர்களை நீங்கும் வரை தமது போராட்டம் தொடரும் என பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர் திரு. வெங்கையா நாயுடு தெரிவித்தார்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணியும் தற்போது சேர்ந்திருக்கும் போலி மதச்சார்பின்மைக் கட்சிகளை தாங்கள் அம்பலப்படுத்த இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். பாரதிய ஜனதா தலைவர் வெங்கையா நாயுடு பி.ரி.ஐ. செய்தி நிறுவனத்திற்கு நேற்று பேட்டி வழங்கி உள்ளார். அப்போது அவர் மேலும் கூறுகையில்: பாரதிய ஜனதாகட்சி தனது அடிப்படை கோட்பாடுகளில் தீவிர கவனம் செலுத்த போவதாகவும் இந்துதத்துவ கொள்கையைகை விட்டு விட்டதாக தொண்டர்களிடையே எழுந்துள்ள எண்ணத்தை அகற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்

# இந்தியாவில் விவசாயம்தான் மக்களின் வாழ்க்கை

## -இந்.அமைச்சர் கமல்நாத்

(புதுடில்லி)

இந்தியாவில் விவசாயம்தான் மக்களின் வாழ்க்கை முறை என்பதனால் உலக வர்த்தக நிறுவனங்கள் விவசாயிகளின் வாழ்க்கைத்தரத்தை பாதுகாக்க உதவவேண்டும் என்று இந்திய விவசாய நலத்துறை அமைச்சர்கமல்நாத் கோரிக்கையினை நேற்று முன்தினம் விடுத்துள்ளார்.

பிறேசில் தலைநகரில் பிறேசில் வெளியுறவு அமைச்சுடன் பேச்சுக்கள் நடத்திய கமல்நாத், பின்னர் செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் பேசியுள்ளார்.

இந்தியாவில் வேளாண்மை என்பது ஒரு பொருளோ, ஒரு வியாபாரமோ அல்ல மக்களின் வாழ்க்கைமுறை என்று கூறியுள்ளார்.

உலக வர்த்தக நிறுவன சார்பில் எதிர்காலத்தில் கொண்டுவரப்படும் ஒப்பந்தங்கள் விவசாய மக்களைப் பாதுகாப்பதாகவே இருக்கும் என்றும் இதனை உலக நாடுகள் புரிந்து கொள்ள வேண்டும் என்று கூறிய அவர்.

உலக வர்த்தகம் தொடர்பான உருகுவே சுற்றுப் பேச்சுக்களின் போது அன்று இந்தியா சார்பில் கைச்சாத்திட்ட காங்கிரஸ்தான் இன்று ஆட்சியிலுள்ளது என்றும் கூறியுள்ளார்.

# அரசை நடத்த முடியாதுள்ள சனாதிபதி இராஜினாமாச் செய்ய வேண்டும்

## முன்நாள் சபாநாயகர் கோருகிறார்

(கொழும்பு)

தனது நிறைவேற்று அதிகார சனாதிபதிமுறையைப் பயன்படுத்திபெரும்பான்மைப் பலத்துடன் கூடிய பாராளுமன்றத் தைக் கலைத்து விட்டு சிறுபான்மையுடன் கூடிய பாராளுமன்றத்தை அமைத்து தற்போது அரசைக் கொண்டு நடத்த முடியாதபடி ஆக்கிவிட்ட சந்திரிகா தனது பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும் என 'முன்னாள் சபாநாயகரான ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித் துள்ளார். நேற்று முன் தினம் எதிர்க் கட்சித்தலைவரின் காரியாலயத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டின் போது அவர் மேலும் தெரிவிக்கையில் பிரதமரையோ அமைச்சரவையையோ நியமிக்கும் அடிப்படை உரிமையில்லாமல் தற்போது சனாதிபதி உள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

### பொலிசாரைத் தண்டிக்கும் அதிகாரம்

# பொலிஸ்மா அதிபரிடமிருந்து பொலிஸ் ஆணைக்குழுவிடம்

(கொழும்பு)

சிறிலங்காவின் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக கிடைக்கும் முறைப்பாடுகளை விசாரித்து அவர்களுக்குத் தண்டனை வழங்கும் அதிகாரம் பொலிஸ்மா அதிபரிடம் இருந்து பொலிஸ் ஆணைக் குழுவிடம் கையளிக்கப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

இதற்குக் காரணம் அவ்வா றான சந்தர்ப்பங்களில் பொலிஸ்மா அதிபரினால் தகுந்த நடவடிக்கை எடுக்காதிருப்பதே என தெரிவிக்கப்படுகிறது.



பரபரப்படையும் ஐரோப்பிய கால்பந்துப் போட்டி

# ஜேர்மனியை இறுதி நேரத்தில் சமப்படுத்தியது நெதர்லாந்து

## செக்குடியரசு ஒஸ்திரியாவுடனான போட்டியில் வெற்றி

போத்துக்கலின் தலைநகர் லிஸ்பனில் நடைபெற்றுவரும் ஐரோப்பிய கிண்ணத்துக்கான கால்பந்துப் போட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற பரபரப்பான ஆட்டத்தில் ஜேர்மனியும், நெதர்லாந்தும் தலா ஒவ்வொரு கோல்களைப்போட்டு சமநிலைபெற்றன.

பெரும் எதிர்பார்ப்புக்கும், பரபரப்புக்கும் மத்தியில் ஆரம்பமான நெதர்லாந்துக்கும் ஜேர்மனிக்கும் இடையிலான ஆட்டம் உச்சக்கட்டத்தை அடைந்தது.

இதில் ஆட்டத்தின் 30ஆவது நிமிடத்தில் ஜேர்மனியின் சேட்டன் பிறின்லா கோல் ஒன்றைப் போட்டு முன்னிலைப்படுத்தினார்.



ஜேர்மனி -நெதர்லாந்து வீரர்கள் மோதும் காட்சி

இதனால் ஏற்பட்ட பரபரப்பு கடைசிவரை நீடித்தது. ஆட்டம் நிறைவடைய ஒன்பது நிமிடம் இருந்தவேளையில் நெதர்லாந்தின் ரூக்மிக்ஸ்ரேலூரி, ஜேர்மனி அணித் தலைவரும் கோல் காப்பாளருமான ஒலிவர்கானுக்கு சவால் விடும் வகையில் அவரை ஏமாற்றிக் கோல் போட்டு ஜேர்மனியின் வெற்றிக்கனவைத் தகர்த்தார்.

இதனால் பரம வைரிகளான ஜேர்மனியும் நெதர்லாந்தும் தலா ஒவ்வொரு கோலுடன் சமநிலை பெற்றது. இது நேற்றைய ஆட்டத்தின் விறுவிறுப்புக்கு மேலும வலுச்சேர்த்தது.

இதனிடையே பிரான்சிடம் அதிர்ச்சித் தோல்வியடைந்த இங்கிலாந்தின் ரசிகர்கள் லிஸ்பன் அருகே கைகலப்பில் ஈடுபட்டதால் போத்துக்கலின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்று முன் தினம் நடைபெற்ற மற்றுமொரு ஆட்டத்தில் செக்குடியரசும், ஒஸ்திரியாவும் ஒன்றையொன்று மோதின. இதில் இரு அணிகளும் தலா ஒவ்வொருகோல் போட்டு சமநிலையில் இருந்தபோது, ஆட்டம் நிறைவடைய 5நிமிடம் மீதமிருந்த போது மேலும் ஒருகோலைப் போட்டு செக்குடியரசு முன்னணி வகித்ததுடன், 2-1என்ற கோல் எண்ணிக்கையில் வெற்றி பெற்றது.

இப்போட்டியிலும் ஆரம்பம் முதல் இறுதிவரை பரபரப்புக்குப் பஞ்சமேயில்லை.



"யூரோ – 2004" கால்பந்தாட்டப்போட்டியில் இத்தாலி வீரர் பிரான்ஸ்கோ டொட்டி டென்மார்க் வீரர்களின் தலைக்கு மேலாகப் பந்தை அனுப்பும் காட்சி.



ஐரோப்பிய கால்பந்துப்போட்டிகளைக் காணவந்த ரசிகர்களின் சில தோற்றங்கள்.

# முரளிதரன் தொடர்பில் அழுத்தம் கொடுக்க மாட்டோம்

### - அவுஸ்.கிரிக்கெட் நிறைவேற்று அதிகாரி

அவுஸ்திரேலிய சுற்றுப் பயணத்தில் தான் பங்கேற்கப்போவதில்லை என்ற கருத்தை முத்தையா முரளிதரன் வரும் நாட்களில் மாற்றிக் கொள்ளலாம் என அவுஸ்திரேலிய கிரிக்கெட்சபை எதிர்பார்ப்பதாக அதன் பிரதான நிறைவேற்று அதிகாரி ஜேம்ஸ்சதர்லண்ட் அறிவித்துள்ளார்.

முரளிதரன் பந்தை வீசியெறிகிறார் என்று அந்நாட்டுப் பிரதமர் ஜோன்ஹவாட் கூறியதையடுத்து மேற்படி சுற்றுப்போட்டியில் பங்கேற்க முரளி மறுத்தார். முரளிதரனின் கடிதத்தில் கூறப்பட்ட விடயங்களை ஆராய்ந்த கிரிக்கெட் சபை அவரின் முடிவை ஏற்றுக்கொண்டுள்ளது.

அவுஸ்திரேலிய அதிகாரி தெரிவித்திருப்பதாவது; முரளிதரன் அவுஸ்திரேலியாவிற்கு வருகை தருவார் எனக் கிரிக்கெட்சபையும், ரசிகர்களும் எதிர்ப்பார்ப்பதாகவும் எனினும் நாம் இது தொடர்பில் சிறிலங்கா கிரிக்கெட்சபைக்கு அழுத்தம் கொடுக்க மாட்டோம் என்றும் தெரிவித்துள்ளார்.

# தனது சொந்த மண்ணில் தொடரை இழந்த மே.தீவுக்கு இங்கிலாந்தில் டெஸ்ட் தொடரை வெல்வது கடினமானது

இங்கிலாந்து அணியுடன் இறுதியாக நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் தோல்வியைத் தழுவிக் கொண்ட மேற்கிந்திய அணி, இந்தத் தொடரிலும் வெற்றி பெறுவது கடினம் என விளையாட்டு விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

பங்களாதேஷ் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பிரகாசிக்கத் தவறிய மேற்கிந்தியத் துடுப்பாட்ட வீரர்கள் இங்கிலாந்து அணியில் பந்து வீச்சாளர்களின் பந்து வீச்சினை எதிர்நோக்குவதில் சிரமமடைவார்கள் என அந்த விமர்சகர்கள் கூறுகின்றனர்.

நியூசிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 3-0 என்ற கணக்கில் வெற்றியீட்டிய இங்கிலாந்து அணி தற்போது பலம்வாய்ந்த நிலையில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

நடைபெறவுள்ள மும்முனை ஒருநாள் தொடரிலும், டெஸ்ட் தொடரிலும் இங்கிலாந்து அணி பலம் வாய்ந்த நிலையில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மும்முனைத் தொடரில் இங்கிலாந்து நியூசிலாந்து, மேற்கிந்தியத் தீவு அணிகள் மோதுகின்றன.

இந்தப் போட்டித் தொடர் எதிர்வரும் 24ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இதேவேளை வெற்றிபெறுவதை இங்கிலாந்து அணி வாடிக்கையாகக் கொண்டுள்ளதாக இங்கிலாந்து அணித் தலைவர் வோகன் தெரிவித்துள்ளார். வெற்றி பெறுவது வாடிக்கையாகிவிட்டால் எத்தகைய சூழ்நிலையிலும் வெற்றி பெறமுடியும் என்ற நம்பிக்கை வந்துவிடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து மேற்கிந்தியத் தீவு அணிகளுக்கிடையிலான நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் யூலை மாதம் 22ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முத்தையா முரளிதரன் எளிதில் உணர்ச்சிவசப்படுபவர் கிரிக்கெட்டில் விரும்புவதை செயலில் காட்ட வேண்டும்

### ஷேன்வோர்ன்



உலக டெஸ்ட் கிரிக்கெட் சாதனையாளர் முத்தையா முரளிதரன் எளிதில் உணர்ச்சிவசப்படுபவரென அவுஸ்திரேலியாவின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் கூறுகின்றார்.

அவுஸ்திரேலியாவுக்கான எதிர்வரும் சிறிலங்கா சுற்றுலாவில் இருந்து விலகிக் கொள்வதாக முரளிதரன் அறிவித்ததையடுத்தே ஷேன்வோர்ன் இதனைத் தெரிவித்துள்ளார்.

முத்தையா முரளிதரனின் தீர்மானம் தவறானது. கிரிக்கெட் அரங்கில் அவர் வெகுவாக விரும்புவதை செயலில் காட்ட வேண்டும். அதன் மூலமே கிரிக்கெட் பூரணத்துவம் பெறும் எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

முரளிதரனுடன் நேருக்குநேர் போட்டியிடுவதற்கு எதிர்பார்த்த போட்டியும் ஏமாற்றத்தைத் தருவதாகத் தெரிவித்த வோர்ன் அது அவுஸ்திரேலிய வீரர்களுக்கும் ரசிகர்களுக்கும் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளதாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

முரளிதரன் பெரும்பாலான நாடுகளுக்கு விஜயம் செய்யமாட்டார் என்ற எண்ணமும் தோன்றுவதாக வோர்ன் மேலும் தெரிவிக்கின்றார்.

இதேவேளை அவுஸ்திரேலிய சுற்றுலா சிறிலங்கா அணியில் இடம்பெற முரளிதரன் மறுத்ததற்கு தனது விமர்சனம் காரணமில்லை என்று தெரிவித்துள்ள அவுஸ்திரேலியப் பிரதமர் ஜோன் ஹவாட் அவுஸ்திரேலியாவில் அவர் விளையாடுவதை முழுமனதுடன் வரவேற்பதாகவும் கூறியுள்ளார்.

இந் நிலையில் முரளியின் முடிவுவருத்தமளிப்பதாகவும் அவர் தனது முடிவை மறுபரிசீலனை செய்யவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.





# ஆசிய கிண்ணத்துக்கான பங்களாதேஷ் அணி அறிவிப்பு

ஆசியக் கிண்ணக்கிரிக்கெட் தொடருக்கான பங்களாதேஷ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்காவில் அடுத்தமாதம் 16ஆம் திகதி முதல் ஓகஸ்ட் முதலாம் திகதிவரை ஆசியக்கிண்ண ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்கான 14 பேர்கொண்ட பங்களாதேஷ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் மேற்கிந்தியத்தீவுக்குச் சென்ற பங்களாதேஷ் அணியில் இரு மாற்றங்கள் மட்டுமே செய்யப்பட்டுள்ளன. அத்தொடரில் சிறப்பாக ஆடாத ஹனான்சர்காரும், காயம் காரணமாக லூரியார் ஹுசைனும் நீக்கப்பட்டுள்ளனர். அணி விபரம் வருமாறு, ஹபிபுல்பஷார் (தலைவர்), கலீட்மசூட் (விக்கெட்காப்பாளர்), ராஜின் சாலே, ஜாவிட் உமர், முகமதுஅஷ்ரபுல், அலோக்கப்பாலி, முஷ்பிகா ரஹ்மன், கலீட்முஹமட், முகமது ரபீக், மன்ஜுரல் இஸ்லாம்ரணா, தபாஷ்பய்ஷியா, தாரிக்அஸீஸ்கான், அப்துர்ரசாக் மற்றும் பைசல் ஹுசைன்.

# டெஸ்ட் போட்டிகளில் துவக்க ஆட்டக்காரராக யுவராஜ்சிங்; எதிர்ப்புத் தெரிவித்த வீரேந்தர் ஷெவாக் மீது கண்டனம்


டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக யுவராஜ்சிங் களமிறக்கப்படுவதற்கு எதிர்ப்புத்தெரிவித்த சேவாக்கிற்கு முன்னாள் அணித்தலைவர்கள் பலர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இனிவரும் டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரராக யுவராஜ்சிங் களமிறக்கப்படுவார் என்று அணித்தலைவர் கங்குலி தெரிவித்தது பற்றி செய்தியாளர்களிடம் பேசிய ஷெவாக் நிதானமாக ஆடக்கூடியவரைத் துவக்க ஆட்டக்காரராகக் களமிறக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இது குறித்துக் கருத்துத்தெரிவித்த இந்திய அணியின் முன்னாள் தலைவர் சாலி உம் பேக்கர் துவக்க ஆட்டக்காரராக யார் களம் இறங்குவது என்பது பற்றி அணித்தலைவர் தான் முடிவெடுக்க வேண்டும் எனவும் அதுபற்றி ஷெவாக் கருத்து தெரிவிப்பது கண்டிக்கத்தக்கது எனவும் கூறியுள்ளார்.

இதேபோன்று முன்னாள் அணித்தலைவர் நாரிக்கான் சாக்கார் தெரிவிக்கையில்; அணித்தலைவருடன் கலந்தாலோசிக்காது ஷெவாக் கருத்துத் தெரிவிப்பது நல்லதல்ல எனவும் தெரிவித்தார்.

**சிந்தனைக்கு**



சமத்துவத்தின் அடிப்படையில் ஒரு சம தர்ம சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதே எமது போராட்ட இலட்சியம்.

தமிழீழத்தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 17-06-2004



தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல்
Daily@eezhanatham.com
natham23ela@yahoo.com


## அநீதிகளுக்கு எதிராக....

அரசாங்கத்தின் மீதான அவநம்பிக்கைகள் தமிழ் மக்கள் மத்தியில் அதிகரித்த வண்ணமுள்ளன. இதன் வெளிப்பாடே பொதுஅமைப்புக்கள் இன்று யாழ்.நகரில் பெரும்பேரணி ஒன்றை நடத்துவதற்கு மேற்கொண்டுள்ள ஏற்பாடாகும். ஐந்து அம்சக்கோரிக்கையை முன்வைத்து மேற்கொள்ளப்படும் இப் பேரணியானது தமிழ் மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிப்பதாக அமையும் எனத் துணிந்து கூறமுடியும்.

தமிழ் மக்கள் காலத்திற்குக்காலம் சிறிலங்கா அரசாங்கத்தின் தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள், அதன் புறக்கணிப்பு என்பன தொடர்பாகப் போராட்டங்களை நடத்தியே வந்துள்ளனர். ஆனால் சிங்கள ஆட்சியாளர்கள் இவ்விடயங்கள் குறித்து எப்பொழுதுமே அக்கறை கொண்டதில்லை. சாத்வீக ரீதியில் தமிழ் மக்கள் வெளிப்படுத்தும் உணர்வுகளை அவர்கள் என்றும் கண்டு கொண்டதாக இல்லை.

ஆனால் தமிழ் மக்கள் தமது உணர்வுகளை காலத்திற்குக்காலம் வெளிப்படுத்துவதென்பது அவசியமானது. ஏன் கட்டாயமானது என்றுகூடக் கூறலாம். ஏனெனில் அவ்வேளையில் தான் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் புறக்கணிப்புக்கள் என்பன வெளிக்கொண்டுவரப்படுவதோடு, தமிழ் மக்கள் எத்தகைய உணர்வுகளைக்கொண்டவர்களாக இருக்கின்றனர் என்பதும் வெளிப்படுத்தப்படுவதாக இருக்கும். ஆகையினால் மக்கள் சளைக்காது இத்தகைய பேரணிகளில் அணிதிரள்வதென்பது அவசியமானதே.

"ஆயுதப்போராட்டம் வளர்ச்சி கண்டுள்ள நிலையில் இத்தகைய பேரணிகள், கண்டனக் கூட்டங்கள் தேவைதானா?" என ஒருதரப்பினர் கேள்வியெழுப்பக்கூடும். ஆனால் இப்பேரணிகளும், கண்டனக்கூட்டங்களும் இரண்டு அம்சங்கள் தொடர்பாக முக்கியத்துவம் மிக்கவையாகவுள்ளன.

இதில் ஒன்று, அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் மக்கள் அவநம்பிக்கை கொண்டுள்ளனர் என்பதை வெளிப்படுத்துவதற்கானது. குறிப்பாக சமாதான முயற்சிகள் தாமதமாவது, தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் மற்றும் தமிழ் மக்கள் மீது தொடரும் வன்முறைகள் போன்ற விடயங்களில் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மீது தமிழ் மக்கள் கொண்டுள்ள அதிருப்தியை வெளிப்படுத்துவதற்கானது.

அடுத்ததாக தமிழ் மக்களின் உணர்வுகளையே விடுதலைப் புலிகள் வெளிப்படுத்துகின்றனர் என்பதற்கானது. சில உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகள் விடுதலைப்புலிகளின் நிலைப்பாடானது தமிழ் மக்களின் நிலைப்பாடாகக் கொள்ளத்தக்கதல்ல எனக்கூறுவதுண்டு. தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளை ஏகபிரதிநிதிகளாகத் தெரிவுசெய்த பின்னரும் கூட இவர்கள் குதர்க்கத்தனமையாகப் பேசுவதும், நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் உண்டு. இதற்குச் சனாதிபதி சந்திரிகாவும், அவரது ஐ.ம.சு.முன்னணியும் கூட விதிவிலக்கானதல்ல.

ஆகையினால் இத்தகைய பேரணிகள், ஊர்வலங்கள் தமிழ் மக்களின் உணர்வுகளையே விடுதலைப்புலிகள் பிரதிபலிக்கின்றனர் என்பதை மீண்டும் வலியுறுத்துவதாகின்றது. அதாவது தமிழ் மக்கள் வேறு, புலிகள் வேறு அல்ல என்பதனை வலியுறுத்துவதாகிறது. இவ் யதார்த்தத்தைப் புறக்கணித்தல் என்பது இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வைப் புறக்கணித்ததாகவே இருக்கும்.

பொது அமைப்புக்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இப்பேரணியானது சிறிலங்கா அரசிற்கு மட்டுமல்ல, சர்வதேச நாடுகளுக்கும் தமிழ் மக்களின் உணர்வுகளை, யதார்தத்தினை வெளிப்படுத்துவதாகவும் அமையக்கூடியதாகும். அதாவது சிறிலங்கா அரசாங்கம் யுத்தநிறுத்தத்தினைப் பயன்படுத்தி, சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதிலோ தமிழ் மக்களின் அபிலாசைகளைத் தீர்த்துவைப்பதிலோ அக்கறை கொண்டிருக்கவில்லை என்பது இதில் முக்கியமானது.

அதுமட்டுமல்ல, விடுதலைப்புலிகள் காக்கும் பொறுமை குறித்தும் அவை புரிந்து கொள்வதற்கு இது வாய்ப்பளிக்கக்கூடியதாகும். ஏனெனில் தமிழ் மக்கள் தொடர்ந்து ஏமாற்றப்பட்டும், அவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையிலும் ஆயுதம் ஏந்திய புலிகள் தொடர்ந்தும் பொறுமையைக் காத்து வருகின்றனர். இது விடுதலைப் புலிகளின் குறிக்கோளுக்கு மாறானதெனினும் சமாதான முயற்சிகளுக்கு வழங்கும் ஒத்துழைப்பிற்காகவே புலிகள் இவ்வாறு செயற்பட்டு வருகின்றனர்.

ஆகையினால் பொது அமைப்புக்கள் யாழ்.நகரில் நடத்தவுள்ள பேரணியானது சிறிலங்கா அரசினது நடவடிக்கைகளைக் கண்டித்து நடத்தப்படுவதாக மட்டும் கொள்ளப்படுதல் கூடாது. தமிழ் மக்களின் உணர்வுகளைச் சர்வதேச சமூகமும் புரிந்துகொள்வதற்கானதாகவும் கொள்ளப்படுதல் வேண்டும். ஏனெனில் தமிழ் மக்களின் பிரச்சினை இன்று சர்வதேச கவனத்தைப் பெருமளவில் ஈர்த்துள்ளது மட்டுமல்ல பல வெளிநாட்டுச் சக்திகள் இவ்விடயத்தில் தொடர்புபட்டவையாகவும், ஈடுபாடு கொண்டவையாகவும் மாறியுள்ளமையினால் இது அவசியமானதாகிறது.

# மு.கா.விலிருந்து பதவி நீக்கப்பட்டோர் மீண்டும் சேர்க்கப்படமாட்டார்கள்

### மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரசில் இருந்து பதவி நீக்கப்பட்ட இரு உறுப்பினர்களும் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள் என்று முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் முரண்பட்ட இரு உறுப்பினர்களான ரிஷாத் பதியுதீன் நஜீப் ஏ மஜீத் ஆகிய இருவரும் தமது பதவி நீக்கத்தை மீள் பரிசீலனை செய்யுமாறு கட்சியின் தலைமைப்பீடத்திடம் கடிதம் மூலம் கேட்டிருந்ததையடுத்து கட்சியின் உயர் பீடம் கலந்தாலோசனை செய்து இவர்களை மீளவும் இணைக்கும் நோக்கம் இல்லை எனத் தெரிவித்துள்ளது.

கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் பதவிநீக்கப்பட்ட இருவரும் கட்சியின் ஒழுக்க விதி முறைகளையும் கட்டுப்பாட்டையும் மீறி நடந்ததாகவும் அத்துடன் கட்சிக்கு எதிராகச் சதித்திட்டம் தீட்டிச் செயற்பட்ட படியினாலும் அவர்களைக் கட்சியின் அனைத்துப் பதவிகளில் இருந்தும் நீக்கியிருந்தது இதனால் கட்சியின் உறுப்பினர்கள் உட்பட உயர் பீடம் கூடி எடுத்த இம் முடிவை மாற்றப் போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

# இடைக்கால நிர்வாகம் தொடர்பாக சனாதிபதி புலிகளுடன் பேசக்கூடாது

### தேசப்பற்றுள்ள தேசாபிமானிகள் அமைப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரம் தொடர்பாக சனாதிபதி பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளக் கூடாதென தேசப்பற்றுள்ள தேசாபிமானிகள் அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அந்த இடைக்கால தன்னாட்சி வரைபானது, தமிழீழத்தை நோக்காக கொண்ட வரைபாகும் எனவே அது குறித்து சனாதிபதி தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கக் கூடாது. சமாதானம் தொடர்பாக நடத்தப்படும் பேச்சுவார்த்தைகள் இறுதித் தீர்வை எட்டும் முயற்சியின் அடிப்படையிலேயே அமைய வேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியாக இருக்கவேண்டும்.

தன்னாட்சி அதிகாரத்தின் அடிப்படையில்தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தினால் அது தமிழீழ விடுதலைப்புலிகளின் தமிழீழக் கொள்ளைக்கு ஆதரவான போக்கிற்கு உதவுவதாக அமைந்து விடும் எனவும் தேசாபிமானிகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

# சமாதான காலத்தில் தென்பகுதியில் குற்றச்செயல்கள் அதிகரிப்பு

### சிறிலங்கா காவல்துறையினர் தெரிவிப்பு

2002ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையிலான போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் கொழும்பில் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளதாக சிறிலங்கா காவல்த்துறையினர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் நாட்டில் தோன்றியுள்ள அமைதிச்சூழலை அடுத்து வெளிநாடுகளில்இருந்து பாலியல் தொழிலாளர்கள் அதிகளவு இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். இதனால் சமூகசீர்கேடுகளும் குற்றச் செயல்களும் பெருமளவு அதிகரித்துள்ளன.

இரவு விடுதிகளில் கேளிக்கைக் களியாட்ட நிகழ்வுகள் என்ற பெயரில் சட்டவிரோதமான நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன எனவே அதிகரித்து வரும் இந்தக குற்றச் செயல்களைக் கட்டுப் படுத்தவிசேட நடவடிக்கைகள் மேற் கொள்ளப் படவிருப்பதாக சிறிலாங்கா உதவி காவல்துறை ஆணையாளர் ஜெயந்த' விக்கிரமரட்ண தெரிவித்துள்ளார். (32)

# கொலன்னாவ சுமங்கல தேரரின் உடலில் உட் காயத்தழும்புகள்

### மருத்துவ நிபுணர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் தாக்குதலுக்கு உள்ளான ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர் கொலன்னாவ சிறி சுமங்கல தேரரின் உடலில் உள்ள உட்காயத் தழும்புகள் தாக்குதல் காரணமாகவே ஏற்பட்டுள்ளதாக வைத்திய நிபுணர் டாக்டர் வச்சிர தென்னக்கோன் தெரிவித்துள்ளார். கடந்த 8ஆம் திகதி நடைபெற்ற இவர் மீதான தாக்குதலின் பின் ஒன்பதாம் திகதி முதல் கொழும்பு தனியார் மருத்துவமனை ஒன்றில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருவது தெரிந்ததே. பாராளுமன்றத்தில் தாக்குதல் எதுவும் நடைபெறவில்லை என அமைச்சர் ஜெயராஜ் பர்னாண்டோ புள்ளே தெரிவித்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

### சிப்பாய் தற்கொலை

தியதலாவ இராணுவ முகாமில் பயிற்சில் ஈடுபட் டிருந்த சிப்பாய் ஒருவர் முகாமின் 4ஆவது மாடியில் கழுத்தில் சுருக்கிட்டு தற் கொலை செய்து கொண்டுள்ளார். சமிந்த சந்திரி என்பவரே தற்கொலை செய்து கொண்டவரா வார். அதற்கான காரணங்கள் எதுவும் இதுவரை தெரியவில்லை.


# திருடருக்கு வைத்த மின்சாரப் பொறியில் சிக்கிய இளைஞர் உடல் கருகிப் பலி

(கொழும்பு)

அடிக்கடி கொள்ளையர்களின் கைவரிசைக்கு உள்ளான வீட்டின் உரிமையாளர் கொள்ளையருக்களுக்காக வைத்த மின்பொறியில் சிக்கிய இளைஞர் ஒருவர் உடல் கருகி மரணமடைந்துள்ளார்.

பலாங்கொடை ஒலுசன் தோட்டத்தில் இடம் பெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருகையில்

அடிக்கடி திருட்டுச்சம்பவங்கள் இடம் பெற்றதால் ஆத்திரமுற்ற வீட்டின் உரிமையாளர் கம்பியில் மின்சாரத்தைப் பாய்ச்சி முக்கிய இடங்களில் வைத்துவிட்டு வெளியே சென்று இரண்டு நாட்கள் சென்ற பின்னர் வீட்டிற்கு வந்து பார்த்துள்ளார். அப்போது அவர் வைத்த மின்பொறியில் சிக்கி இளைஞர் ஒருவர் உடல்கருகி இறந்து கிடக்கக் காணப்பட்டார். அவர் பொலிசில் முறைப்பாடு செய்ததை அடுத்து ஸ்தலத்திற்கு விரைந்த பலாங்கொடை பொலிசார் உடலைக் கைப்பற்றி அடையாளம் காண்பதற்காக மருத்துவமனையில் ஒப்படைத்ததோடு, வீட்டு உரிமையாளரையும் கைது செய்து தடுத்துவைத்துள்ளனர். இவர் மீது மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.




### கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

தேசிய கடல் எல்லைகளுக்கு அப்பாலான ஆழமான கடற்பகுதி பூமியின் மேற்பரப்பில் 50 வீதமான பகுதியை மூடியுள்ளது. இதுவே உலகின் மிகக்குறைந்த பாதுகாப்புக்கு உட்பட்ட பகுதியாகும்.

# இ.த.அதிகார சபையை நிறுவுவதே பேச்சுக்களை ஆரம்பிக்க ஒரே வழி

## தமிழ் பேசும் மக்களின் அமையம் தெரிவிப்பு

(வடமராட்சி)

"தமிழ்ப்பிரதேசங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளை வேறு விதத்தில் கையாள்வது என்பது அரசாங்கம் தமிழீழத் தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதில் அக்கறையாற்றியிருக்கிறது." என்ற எண்ணப்பாட்டையே உருவாக்குவதாக "மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திகளுக்குமான தமிழ் பேசும் மக்களின் அமையம்" குற்றம் சாட்டியுள்ளது.

அண்மையில் குடாநாட்டிற்கான விஜயமொன்றினை மேற்கொண்டிருந்த சனாதிபதியின் ஆலோசகர் ஹரீம்பீரிஸ் "எதிர்வரும் காலப் பகுதியில் பேச்சுவார்த்தையும் அபிவிருத்தியும் சமாந்தரமாகவே முன்னெடுக்கப்படும்"எனும் கருத்தொன்றை வெளியிட்டிருந்தார். இக் கருத்துத் தொடர்பாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்களிற்கு மேற்படி அமையம் மகஜரொன்றை நேற்று அனுப்பி வைத்துள்ளது.

பேச்சுவார்த்தையும் அபிவிருத்தியும் சமாந்தரமாக முன்னெடுத்தல் என்ற எண்ணத்தை நிறுத்திவிட்டு வடக்குக் கிழக்கின் சகல அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வுப் பணிகளையும் கையாளக்கூடிய இடைக்கால தன்னாட்சி அதிகார சபை ஒன்றை வழங்குவதே பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பதற்கேற்றதோர் வழி என தெரிவித்துள்ள அவ்வமையம், இவ்விடயத்தில் துணிந்து நடவடிக்கைகளை முன்னெடுத்து பேச்சுக்களை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறும் சனாதிபதியைக் கோரியுள்ளது.(27)

# சட்டையுடன் நேர்முகப் பரீட்சைக்குச் சென்றவரை சேலையுடன் வருமாறு திருப்பி அனுப்பிய அதிகாரி

நேர்முகப் பரீட்சைக்குச் சட்டையுடன் சென்ற பெண் பரீட்சார்த்தி ஒருவரைச் சேலையுடன் வருமாறு நேர்முகப் பரீட்சை நடத்திய அதிகாரி ஒருவர் திருப்பி அனுப்பியுள்ளார். இச்சம்பவம் வலிகாமம் பகுதியிலுள்ள பிரதேச செயலகம் ஒன்றில் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றுள்ளது.


இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, பட்டதாரிகளை அரச சேவையில் இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை குறித்த பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது இதற்குத் தோற்றுவதற்கு பெண் பரீட்சார்த்தி ஒருவர் சட்டையுடன் சென்றுள்ளார். அப்போது நேர்முகப் பரீட்சை நடத்திய பெண் அதிகாரியொருவர் பரீட்சார்த்தியை வீட்டிற்குச் சென்று சேலையுடன் வருமாறு திருப்பி அனுப்பியுள்ளார். இதனால் மனம் குழம்பிய அப்பரீட்சார்த்தி நேர்முகத் தேர்விற்குச் செல்லாது விட்டுள்ளார். இது குறித்து பரீட்சார்த்தியின் பெற்றோர் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தின் உதவியை நாடியுள்ளனர். (27)

## ரத்னசீக தேரர் கடத்தல் விவகாரம்

# மொரட்டுவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

ஜாதிக ஹெல உறுமயவின்முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கத்தலுவே ரத்னசீக தேரர் கடத்தப்பட்டதாகக் கூறப்பட்டமை தொடர்பில்பணிநீக்கம் செய்யப்பட்டுள்ள மொரட்டுவ காவல்மையப் பொறுப்பதிகாரி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார். சம்பவம் குறித்து உரிய நடவடிக்கை எடுக்கவில்லையெனக் குற்றம் சுமத்தி அனுருத்த என்ற இந்த பொறுப்பதிகாரி பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டார். எனினும் தமது இந்த இடைநிறுத்தம் சட்ட விரோதமானது எனக் குறிப்பிட்டுள்ள மொரட்டுவ காவல்துறைப் பொறுப்பதிகாரி தமது இடைநிறுத்தம், சட்ட விரோதம் என அறிவிக்கப்பட வேண்டும் எனக் கேட்டுள்ளார். (32)

# இந்தியாவில் புகையிரத விபத்தில் 25 பேர் கோரப் பலி; பலர் காயம்



இந்தியாவில் நேற்றுக் காலை ஏற்பட்ட புகையிரத விபத்தொன்றில் 25 பிரயாணிகள் கோரமாகப் பலியாகியுள்ளனர்.

நேற்று அதிகாலை 6.00 மணியளவில் மங்கனூரில் இருந்து மும்பைக்குச் சென்று கொண்டிருந்த "மத்திய கண்டா" எனும் புகையிரதம், புகையிரத பாலத்தின் குறுக்கே இருந்த பாறையுடன் மோதியதனாலேயே இவ்விபத்து நேர்ந்துள்ளது. விபத்திற்குள்ளான புகையிரதத்தின் எஞ்சின் ஆற்றில் விழுந்ததும் புகையிரதப் பெட்டிகளில் இருந்த பயணிகளும் ஆற்றில் விழுந்தனர். ஏனைய பயணிகள் புகையிரதப் பெட்டிகளில் இருந்து அவலக்குரல் எழுப்பினர். இப்புகையிரத விபத்தில் 100இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளதாக இந்திய செய்திகள் தெரி விக்கின்றன.இப்பகுதியில் தொடர்ந்து பெய்த மழையினால் பாறைகள் சரிந்து புகையிரதப் பாதையில் வீழ்ந்திருக்கலாம் எனக்கூறப்படுகிறது.

இதே பகுதியில் கடந்த ஆண்டு இடம் பெற்ற புகையிரத விபத்தில் 50 பேர் பலியாகியமை குறிப்பிடத்தக்கது.

# சந்தையில் ஏற்பட்டிருந்த தளம்பல் சனாதிபதியின் உரையால் நீங்கியதாம்

## மத்திய வங்கி தெரிவிப்பு

அண்மையில் சனாதிபதி நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் தெரிவித்த கருத்துக்கள் அரசியல் காரணங்களினால் சந்தையில் ஏற்பட்டிருந்த இஸ்திரமற்ற நிலையை நீக்குவதற்கு உதவியுள்ளதென மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

தற்போதைய பொருளாதார அபிவிருத்தி வேகத்தைத் தொடர்ந்து பேணமுடியும் என சுட்டிக்காட்டியுள்ள மத்திய வங்கி வட்டி விகிதத்தில் மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் இல்லையெனச் சுட்டிக் காட்டியுள்ளது. மத்திய வங்கியின் நிதிக்கொள்கை பற்றி விளக்கும் நோக்குடன் வங்கியின் பிரதி ஆளுநர் விஜயவர்த்தன தலைமையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்மை குறிப்பிடத்தக்கது. அரசு புதிய பொருளாதாரக் கொள்கைகளை அறிமுகம் செய்த பின்னர் இலங்கை நாணயத்தின் பெறுமதி இஸ்திரநிலையை அடைந்துள்ளது. சர்வதேச உள்ளூர் பொருளாதார மாற்றங்களின் அடிப்படையில் டொலருக்கு எதிராக ரூபாவின் மதிப்பு வீழ்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கில் கலவரத்தை ஏற்படுத்தும் வகையில் அரச நிறுவனங்கள் செயற்படவில்லை

## பிரதி ஊடகஅமைச்சர் சேகு இஸத்தீன்

(கொழும்பு)

அரச ஊடகத்தைச் சேர்ந்த அச்சு ஊடகமோ அல்லது ஒலி, ஒளி ஊடகமோ எதுவாயினும் யாரையும் புண்படுத்தக்கூடியவாறு எந்தப் போராட்டக் குழுவோ, அல்லது சாதாரண குழுவோ மனம் நோகின்ற வகையில் தவறான அறிக்கைகளை வெளியிடுகின்ற வகையில் அவர்கள் செயற்படுகிறார்களானால் அது கண்டனத்திற்குரிய விடயமெனப் பிரதித் தகவல் துறை அமைச்சர் சேகு இஸத்தீன் பி.பி.சிக்குத் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரச ஊடகங்கள் ஊடாக வரும் சில வானொலி நிகழ்ச்சிகளில் சமா தானத்திற்கு எதிராகக் குறிப்பாகக் கிழக்கு நிலவரம் குறித்துத் தவறான கருத்துக்கள் வெளியிடப்படுவதாகப் புலிகள் கூறுகின்றனர். இது குறித்து உங்களின் கருத்து என்ன? என வினவியவேளை அரசின் தகவல் ஊடகத்துறைப் பிரதியமைச்சர் என்ற வகையில் இதுபற்றி நான் ஆராய்ந்து கூறுவதுதான் சரியென நினைக்கின்றேன். இதே வேளை புலிகள் கூறியதைப் போன்று ஒரு பிரத்தியேக வானொலி அமைப்பிற்கு இடம்கொடுத்துள்ளமை பற்றி நான் அறிவேன். அதில் என்ன தவறு நிகழ்ந்துள்ளதென இப்போது தெரியவில்லை என்றார் புலிகளை காயப்படுத்துகின்ற வகையிலோ அல்லது கிழக்கிலோ புலிகளுக்கும், மாற்று குழுக்களுக்குமிடையே கலவரத்தை ஏற்படுத்துகின்ற வகையில் அரச சார்பான நிறுவனங்கள் செயற்படவில்லையென நினைக் கிறேன். அவ்வாறு அது செயற்படு மாயின் அதைப்பற்றி உடனடியாக அமைச்சர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து சம்பந்தப்பட்ட ஊடகங்களின் தலைவர்களைத் தொடர்புகொண்டு இவ்வாறான விடயங்கள் நடைபெறக் கூடாதென் பதை அவர்களுக்கு நான் கூறுவேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

### மக்களைக்...

பரப்பப்பட்டு வருகின்றன.

இப்பகுதியில் இவ்வகையான எந்தவொரு மோதலோ, அல்லது ஆள்இழப்புக்களோ ஏற்பட வில்லையென்பதே உண்மையானதாகும் இந்நிலையில் அரச ஊடகங்களில் திட்டமிட்ட ரீதியில் பரப்பப்பட்டு வரும் இவ்வகையான செய்திகளையிட்டு நாங்கள் எமது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாறான செய்தியின் உண்மைத்தன்மை பற்றித் தெளிவாக அறிந்து ஊடகங்கள் பொறுப்புடன் செயற்பட முன்வரவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

இத்தகைய போலிச் செய்திகளை உண்மையானவையென நம்ப வைப்பதற்காக முயற்சிகளும் சிறிலங்காப் படைத்தரப்பினால் முடுக்கிவிடப்படுவதாக நாங்கள் கருதுகிறோம்.

கடந்த சில நாட்களாக மட்டக்களப்புப் பிரதேச எல்லைப் புறங்களிலுள்ள இராணுவ முகாம்களிலிருந்து தொடர்ச்சியான எறிகணை வீச்சுக்கள் இடம் பெற்று வருகின்றன. பயிற்சி என்ற ரீதியில் இராணுவத்தால் நடத்தப்படும் இந்த எறிகணை வீச்சுக்கள் அங்கே ஒரு மோதல் இடம்பெறுகிறது என்ற மாயத்தோற்றத்தைப் பிரதிபலிக்கின்றது.

மேலும் சிறிலங்கா அரச ஊடகச் செய்திகளில் மோதலின் போது உயிரிழந்தவர்களில் 17இற்கு மேற்பட்ட சடலங்கள் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறாயின் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் மோதல் நிகழ்துள்ளதா? என்ற வினாவும் இங்கே எழுகிறது எனத் தெரிவிககப்பட்டுள்ளது.

### சுயாதீன...

யதன் அவசியத்தைஅவர் வலியுறுத்தினார். தாம் கடந்த காலங்களில்தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டமையின் பின்னர் வழங்கிய பரிந்துரைகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவில்லை என அவர் குற்றம் சுமத்தினார். (32)

### இன்று...

புக்களும் அறைகூவல் விடுத்துள்ளன

பேரணியில் கலந்துகொள்ள நல்லூருக்கு வருகை தருவோருக்கு போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### அலுவலக...

அந்தந்தப் பிரதேச நிலைமைகளுக்கு ஏற்ப மாற்றி அமைக்கப்பட உள்ளதாகவும் இது சம்பந்தமாகக் குறிப்பிட்ட அமைச்சுக்களுடன் அரசாங்கம் கலந்தாலோசித்து வருவதாகவும தெரியவருகின்றது.

### போர்....

கலந்துகொள்வேன். அப்போது புலிகள் தெரிவித்த விடயங்கள் குறித்தும் அவர்களுடன் கலந்துரையாடிடுவேன். இரு பகுதியினரையும் இணக்கப்பாட்டிற்குக் கொண்டு வரும் வரை எமது முயற்சிகள் தொடரும் எனவும்,

மேலும், கிழக்கு நிலவரம் குறித்து சில செய்தி ஊடகங்கள் தவறான அறிக்கைகளை விடுத்துள்ளதாகப் புலிகள் என்னிடம் தெரிவித்துள்ளனர். நான் இன்று அதை அரசாங்கத்திடம் தெரிவிப்பேன் எனவும்,

கலந்துரையாடல் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக அமைந்தது. ஆனால், எந்தவிடயத்திலும் தீர்மானங்கள் எடுக்கப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (லோ,ச)

### ஆண்டு...

னவே அவையாகும். முதலாம் வகுப்பில் ஆகக் கூடியது 40 மாணவர் கள் மட்டுமே அனுமதிக் கப்படுவர். பிரதான குடியிருப்பாளராக இல்லாதோரின் பிள்ளைகள் 7 வீதமானோர் மாத்திரமே அனுமதிக்கப்படுவர் தமது சகோதரனோ சகோதரியோ கல்வி கற்கின்ற பாடசாலைகளில் 15 வீதமானொருக்கு மாத்திரமே இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பழைய மாணவர்களின் பிள்ளைகளுக்கான இட ஒதுக்கீடு 25 சதவீதமாகும். கஸ்ரப் பிரதேசங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கான இட ஒதுக்கீடு 4 வீதமாகும் இடமாற்றம் பெற்ற பெற்றோர்களின் பிள்ளைகள் 7 சதவீத இட ஒதுக்கீட்டை பெறுவர். கடல் கடந்த நாடுகளில் பணியாற்றிய பெற்றோர்களின் பிள்ளைகளுக்கான இடஒதுக்கீடு 2 வீதமாகும். முப்படை வீரர்களின் பிள்ளைகளுக்கு 5 வீத இட ஒதுக்கீடு கிடைக்கும்.

### சமாதானத்திற்கும்...

வரவேற்றனர்.

சிறிலங்கா வானொலி ஊடாக லண்டனிலிருந்து ஒலிப்ரப்பாகும் தமிழ் ஒலிபரப்புச் சேவையில் மட்டக்களப்பில் விடுதலைப்புலிகளுக்கும் - கருணா குழுவிற்கும் இடையில் தொப்பிக்கலை காட்டுப்பகுதியில் மோதல்கள் நடைபெற்றுவருவதாக வெளியாகும் உண்மைக்கு மாறான செய்திகளின் காரணமாக மக்கள் மனம் நொந்து போயுள்ளனர்.

இவ் ஒலிபரப்பானது, சிறிலங்கா இராணுவத்திற்குத் துணையாகச் செயற்படும் குழுவொன்றினால் ஒரு மணித்தியாலத்திற்கு ஒலிபரப்பப்படுகின்றதென்றும், பேச்சுவார்த்தை தொடர்பான முன்னெடுப்புக்களுக்கு பாதகம் ஏற்படுத்தும் இவ் ஒலிபரப்புச் சேவையை சிறிலங்கா அரசு உடன் நிறுத்த வேண்டும் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் நோர்வேத் தூதுவரிடம் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார். (லோ, ச)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு யூன் மாதம் 17ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.